
235

# திருச்சிக்கல் தலவரலாறு

தேவஸ்தான வெளியீடு

235/4.12
199
ACC-TNAL 00205
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 OCT 1952
MADRAS



Q23:38.21193.5
N52
113982

விலை அணா. ஆறு

OFFICE OF THE REGISTRAR OF ... 22 OCT 1952 MADRAS

# பதிப்புரை.

இக்கோயிலைப் பற்றி வெளியாகியுள்ள நூல்கள்: 1. ஸ்ரீ திருச்சிக்கல் க்ஷேத்திர மான்மிய வசனம் 2. திருச்சிக்கல் தல வரலாறு (1941) 3. சிக்கல் கோயில் (ஆங்கிலம்) 1941 4. சிக்கல் புகழ்ப் பாமாலை (1949) ஆவன. திருச்சிக்கல் தல வரலாறு தேவஸ்தானம் வெளியீடு. முதற் பதிப்பு 1941-ல். ஆசிரியர் இப்பொழுது தருமைப் பல்கலைக் கழக ஆசிரியர் வித்வான் திரு. தண்டபாணி தேசிகர் ஆவர். அதன் இரண்டாவது வெளியீடு 1949-ல் தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. T. D. மீனாட்சிசுந்தரம் பிள்ளை B.A., B.L., (தற்போது Deputy Registrar Annamalai University) அவர்கள் காலத்தில் வெளியிடப்பட்டது. திருச்சிக்கல் தலவரலாறு என்ற இப்புத்தகம் அதன் மூன்றாவது வெளியீடே. இப் புத்தகத்தின் பின்பகுதியில் இந்தக் கோயிலைப் பற்றிய பாடல்களைத் தொகுத்து இணைத்திருக்கின்றது. பதிப்புரையாகிய இப்பகுதியில் இந்த அருமையான கோயிலைப் பற்றிய சில விசேட நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. தற்சமயத்திற்கேற்ப திருத்தங்கள் செய்து தலவரலாறு அளித்த வித்வான் திரு. தண்டபாணி தேசிகருக்கும், தங்கள் பாட்டுக்களை இதில் இணைப்பதற்கு இசைந்து உதவிய திருவாசகம் திரு. K. M. பாலசுப்பிரமணியம் B.A., B.L., திரு. N. S. சிதம்பரம், திரு. T. D. மீனாட்சிசுந்தரம் பிள்ளை B. A., B. L., (Deputy Registrar, Annamalai University) ஆகியோருக்கும் தேவஸ்தானத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஸ்ரீ திருச்சிக்கல் க்ஷேத்திர மான்மிய வசனத்திலிருந்து, சில பாடல்களை பின் பகுதியில் இணைத்திருப்பதால் அதன் பதிப்பாளர் திரு. கோவிந்தசாமி பிள்ளை குடும்பத்தாருக்கும் தேவஸ்தானத்தின் நன்றி உரித்தாகுக.

திருச்சிக்கல் தலவரலாறு எனும் இப்புத்தகத்தை எடுக்கும் போது, இது சிக்கலிலுள்ள சிங்கார வேலவரைப்பற்றிய வரலாறு என்று தோன்றுவது இயற்கை. சிக்கல் என்றவுடன் சிங்கார வேலவர்தான் ஞாபகத்திற்கு வரும், மதுரை என்றவுடன் மீனாட்சி அம்பிகையை நினைப்பது போன்று சிக்கலும் சிங்காரவேலவரும் அப்படி இணைந்து விட்டனர், அழகோடும் சிறப்போடும். சிக்கல் சுப்பிரமணிய தலமாக விளங்குவது உண்மைதான். ஆனால் இங்கு சுப்பிரமணியர் விசேஷ மூர்த்தியாகத்தான் விளங்குகின்றார். மூலவர் ஸ்ரீ வெண்ணெய்ப் பிரானென வழங்கும் சிவபெருமான் என்பது சிலருக்குத்தான் தெரியலாம். அப்பன் நவநீதனை

அமைதியுடன் அருள்பாலிக்க குமரன் கோலாகலத்துடன் இளங் குமரிகள் இருபுறம் நிற்க அழகே வடிவமாய் குவலயத்தையே காந்தமாய் கவர்ந்து இழுக்கின்றான். கோயிலைக் கண்டவர்களுக்குத்தான் தெரியும் இந்த உண்மை. இன்னுமொரு விசேடம். சைவமும் வைணவமும் ஒருங்குகூடிய சிறப்பும் இந்த தலத்திற்கு உண்டு. கோலவாமனப் பெருமாள் சிவனோடும் கோயில்கொண்டு பக்தர்களுக்கு காட்சி புரிகின்றார். ஆக, கோயிலின் சிறப்பு, சிங்காரவேலவர் சிறப்பும், அதோடு சைவமும் வைணவமும் ஒருங்கு சேர்ந்து கமழும் சிறப்புமாகும்.

11398ஐ

சிக்கல் சுப்ரமண்ய தலமாக விளங்குவதற்கும் காரணங்கள் இல்லாமலில்லை. கோயில் அமைப்பிலும் குமரன் பெருமையே பூத்துப் பரிமளிக்கின்றது. வேலவர் வேடன் விருத்தராக வள்ளியிடம் காதல் காட்டுதல். அம்பாளிடம் சூரனை சங்கரிக்க சக்தி வேல் வாங்குதல், சூரனை சங்காரம் செய்தல் முதலிய புதிய ராஜ கோபுரத்தில் நேர்த்தியான கதை வடிவில் பொலிவுற விளங்குகின்றன. ராஜகோபுரத்துள் நுழைய வேண்டியதுதான். கலை மாளிகையில் நுழைந்த ஒரு உணர்ச்சி. கண்களைக்கவரும் கந்தன் திருவிளையாடல் சித்திரங்கள். குமரன் பிறப்பு முதல் கல்யாணம் வரை கிருத்திகை மண்டபம் என வழங்கும் வசந்த மண்டபத்தின் மேல் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தைக் கடந்து துவஜஸ்தம்பத்தோடு கூடிய கோயில் உள்ளே நுழைந்தவுடன், தெற்குப்புறம் அமைந்த இரும்புக் கதவுகள் பொருந்திய வாகன அறைகளைக் காண்கின்றோம். அவற்றுள் ஸ்ரீ சிங்கார வேலவருக்கென்றே ஏற்பட்ட தங்கத்தாலான தனிப் பெருமையும் பேரழகும் வாய்ந்த மயில், குதிரை, ஆட்டுக்கிடா, மஞ்சம் இவைகளும் வெள்ளியாலான ரிடபம் முதலிய வாகனங்களும் கண்களுக்குப் பெருவிருந்தை அளிக்கின்றன. கோயில் மத்தியில் அமைந்துள்ள கட்டுமலையுட் சென்றால், வர்ணச் சலவைக் கற்கள் வேய்ந்த கோலக் குமரனின் சிங்கார சந்நிதியில், முருகன் நேர்த்தியான வெள்ளி மஞ்சத்தில் காட்சி அளிக்கின்றான். 'அழகிய சிக்கல் சிங்காரவேல'வரைக் காண்கின்றோம். உற்சவ விக்ரஹம் இருபுறம் இரு மாதர், கருணை பொதியும் மதிமுகம் நின்ற திருக்கோலம், அழகும் இளமையும் கலையும் அருமையும் சிங்கார வேலவராக உருவெடுத்து காட்சி அளிக்கின்றன. ஆக, உள்ளே நுழைவதிலிருந்து உன்னத சந்நிதியென வழங்கும் இடமெங்கும் முருகனுடைய எழிலே சிக்கல் கோயிலில் பரந்து கிடக்கின்றது. இங்கு விசேடமாக கொண்டாடப்படுவது குமரன் உற்சவங்களே. பொதுவாக கிருத்திகைதோறும் சிறப்பாக கந்தசஷ்டிதோறும் வேலவரின் சிங்காரத்தைக் காண அநேக அன்பர்கள் காத்து

நிற்கின்றனர். அழகைக் கண்டு அகம் குளிர்கின்றனர். அதனாலல்லவா சிக்கல் தலம் யாவருக்கும் சுப்பிரமணிய தலமாக மிளிர்கின்றது.

கலை அழகு கமழும் இந்த ஆலயம் கலை அரங்கமாகவும் திகழ்வதில் ஆச்சரியமில்லை.

**கிருத்திகை மண்டபம்:** இங்கு பார்ப்பதற்கு கண்குளிர கந்த புராண எழிலோவியங்கள், படிப்பதற்கு தென்பகுதியில் ஒரு நூல் நிலையம். சில முக்கிய கிருத்திகை நாட்களில் மாலையில் சிங்கார வேலவர் ரத்னாபரணங்கள் தங்க கவசத்தோடு ஜெகஜ்ஜோதியாகக் காட்சி அருள இன்னிசை அரங்கேற்று விழாவும் நடக்கின்றது.

**கல்யாண மண்டபம்:** கோயிலுக்கு முன் அமைந்திருக்கும் இந்த பெரிய மண்டபம் கோயிலுக்கு ஒரு அரிய கலைப் பொக்கிஷமாகும். மின்சார விளக்குகள் பாங்குடன் பொருந்தியது. இரு பக்கங்களிலும் சீர்மிகு இரும்புத் தூண்கள் கொண்டது. கோயிலுக்குத் தனிப்பெருமை கொடுக்கவல்ல பொலிவோடும் விசால இடத்தோடும் காண்பவர்கட்கு ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் தரவல்லது. கந்தசஷ்டி உற்சவ சமயத்தில் அரிய சமய சொற்பொழிவுக் கூடமாகவும், இன்னிசை அரங்கமாகவும் திகழ்கின்றது. 1948-ல் நடந்த கந்தசஷ்டியைப்பற்றி சுதேசமித்திரன் கூறுவது: "சிக்கல் ஸ்ரீ சிங்காரவேலவர்சுவாமி கோயிலில் ஸ்கந்த சஷ்டி உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. 10 தினங்களிலும் பிரபல சங்கீத வித்வான்களுடைய கச்சேரிகள், நாதஸ்வரங்கள், சமய சொற்பொழிவுகள், வேதபாராயணம், தேவாரம் திருப்புகழ் முதலியன நடைபெற்றன. பல வித்வான்கள் உபன்யாசத்தில் கலந்துகொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தனர்." ஆக கந்தசஷ்டி உற்சவப் பெருமை இந்த ஹாலின் பெருமையும் அங்கு நிகழும் அரிய கலை நிகழ்ச்சிகளின் பெருமையுமே எனில் முற்றும் பொருந்தும்.

கலைப் பணியோடு இக்கோயில் ஆக்க வேலைகள் நின்றுவிடவில்லை. தோட்ட விருத்தியிலும் நிர்வாகத்தினர் கவனம் செலுத்தி வருகின்றனர். சுதந்திரம் பிறந்த நன்னாளில் (15—8—47) ஸ்ரீ சிங்கார வேலவர் காய்கறித் தோட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. "சிக்கல் ஸ்ரீ சிங்கார வேலாயுதசுவாமி தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள காய்கறித் தோட்டத்தை நாகப்பட்டணம் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ என். ரெங்கசாமி அய்யங்கார் திறந்து வைத்தார். ஏராளமான மிராசுதார்கள் வந்திருந்தார்கள். தோட்டத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் மிராசுதார்களும்

தேவஸ்தான நிர்வாகஸ்தர்களும் நிலங்களைக் காலியாகப் போடாமல் காய்கறி கிழங்கு முதலியவைகளைப் பயிர்செய்ய வேண்டுமென்றும், மரங்களை ஏராளமாக வளர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்'' (18-8-47 - சுதேசமித்திரன்). அதன்படியே உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின்கீழ் தேவஸ்தான நிலங்களில் தோட்ட சாகுபடி அபிவிர்த்தி செய்யப்பட்டது. இந்த தோட்டத்தில் விளைந்த காய்கறிகளெல்லாம், திரு. சுப்பராயன் அவர்கள் மந்திரியாக, சிக்கலுக்கு விஜயம்செய்த சமயம் கல்யாணமண்டபத்தில் கண்காட்சியாக மக்களுக்குத் திரட்டிக் காண்பித்ததும் குறிப்பிடத் தக்க விஷயமாகும். சென்னை சட்ட சபாநாயகர் கனம் திரு. சிவஷண்முகம் பிள்ளை, தஞ்சை ஜில்லா கலெக்டராயிருந்த திரு. மாக்லாவின், தஞ்சை ஜில்லா காங்கிரஸ் தலைவர் திரு. A. M. சாமிநாத செட்டியார் முதலிய பெரியார்கள் இந்த சிங்காரவேலவர் தோட்டத்திற்கு விஜயம் செய்திருக்கின்றனர். கோவிலுக்குப் பின் புண்ணிய தீர்த்தமாக விளங்கும் பால் குளத்தைச் சுற்றி தென்னை மரங்களும் 1948ல் பயிரிடப்பட்டிருக்கின்றன. தென்னங்கன்றுகள் மரங்களாகி வானளாவும்போது பால் குளத்தின் அழகு இயற்கை எழிலோடும் மிகுந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஆலயத்தில் நடந்துவரும் நிகழ்ச்சிகளைச் சிறந்த வைபவமாக்கி வருவது மக்களின் ஆர்வமும், ஒத்துழைப்புமாகும். சமீபத்தில் நடந்த சில விசேட நிகழ்ச்சிகளைக் குறிப்பதற்கும் இது தகுந்த இடமாகும்.

1. **ஹரிஜன ஆலயப் பிரவேசம்**:- 2—5—47 சிக்கல் கோயில் சரித்திரத்தில் ஒரு பொன்னேடு. ஹரிஜனங்களுக்கு ஆண்டவன் ஆலயம் திறந்துவைக்கப்பட்டது. மாஜி மந்திரி திரு. முனிசாமி பிள்ளை, சுவாமி திரு. சகஜானந்தர் அவர்கள் தலைமையில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் வெகு விமரிசையாக நடந்தேறியது. சிக்கல் ஆலய நூல்நிலையமும் பொதுமக்களுக்குத் திறந்துவைக்கப்பட்டது. கல்யாண மண்டபத்தில் திரண்டிருந்த ஏராளமான ஹரிஜன சகோதரர்களுக்கு தலைவர்கள் நல்லாசியும் அன்பு மொழிகளும் அருளினர்.

2. **சுதந்திர தினக் கொண்டாட்டம்** :- 15—8—47 இந்தியா புத்துயிர் பெற்ற புனித தினம். சுதந்திர சூரியன் இன்பச் செங் கதிர்களை இந்தியாவெங்கும் பரப்ப இந்திய மக்கள் ஆர்வத்தோடும் குதூகலத்தோடும் கொண்டாடிய சுபதினம். அன்று காலையில் சிக்கலில் மக்கள் புத்தாடை பூண்டு மகிழ்ச்சியோடு ஒன்றுகூடி சிக்கல் கோயில் கோபுரத்தில் கொடியேற்று விழாவில் கலந்து கொண்டதும், மாலையில் சிங்காரவேலவர் காய்கறித் தோட்டம்

சுதந்திர நன்னாளின் ஞாபகச் சின்னமாக ஆரம்பிக்கப்பட்ட வைபவத்தில் பல அன்பர்கள் கூடியதும், விசேட கோயில் அலங்கார ஆராதனைகளில் யாவரும் ஊக்கத்தோடு பங்கெடுத்துக் கொண்டதும் யாவர் உள்ளத்திலும் ஊன்றி நினைக்க நினைக்க இன்பம் பயப்பதாகும். ஆலயத்தையும் அன்பர்களையும் கூட்டி வைத்த திருநாளாகும்.

3. **ராஜாஜி எழுபதாவது பிறந்த தினக் கொண்டாட்டம்:—** 16—12—47ல் நமது மேன்மைதங்கிய கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்களின் எழுபதாவது பிறந்த தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கோயிலில் ஏற்பாடு செய்திருந்த விசேட பூஜைகள், அபிஷேக ஆராதனைகள் இவைகளில் கிராம மக்கள் உற்சாகத்தோடு கலந்துகொண்டதும் குறிப்பிடவேண்டிய விசேடமாகும்.

4. **மகாத்மா மறைவு:–** 12—2—48 நமது நாட்டின் தந்தை மகாத்மா காந்தி அடிகளின் அஸ்தி அடக்கநாள். உலகமே துயரில் ஆழ்ந்து துடித்த தினம். அன்று கோயிலில் நடந்த விசேட பூஜைகளிலும், அபிஷேக ஆராதனைகளிலும் அன்பர்கள் ஏராளமாகக் கலந்துகொண்டனர். கல்யாண மண்டபத்தில் குழுமியிருந்த தேசபக்தர்கள் அனைவரும் காந்தி அடிகளுக்குப் பிடித்தமான கீதை, குர்ஆன், பைபிள் இவைகளிலிருந்து முக்கியமான பகுதிகளை வாசிக்கக் கேட்டனர். காந்திஜி வாழ்க்கை வரலாற்றைப் படிக்கக் கேட்டனர். ராம பஜனையிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.

5. 26—9—48ல் ஹைதராபாத் தினக் கொண்டாட்டத்தில் நாட்டின் நலத்திற்கும் இன்பத்திற்கும் அவசியமான ஒன்றுபட்ட மனத்திற்காக ஆண்டவனை வழிகாட்டவும் பலம் தரவும் வேண்டிய சமயத்தும் கோயிலில் நடந்த விசேட அபிஷேக பூஜைகளில் பொதுமக்கள் ஏராளமாகக் கலந்துகொண்டனர்.

6. **பிரம்மோற்சவம்:–** நீண்ட ஆண்டுகளாக நின்றிருந்த பிரம்மோற்சவம் 1949ம் ஆண்டில் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிறது. பெரிய ரதம் செப்பனிடப்பட்டது. ஒதுக்கி வைத்திருந்த மர வாகனங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு அழகாக வர்ணம் தீட்டி உற்சவத்தில் உபயோகப்பட்டன. அரிய சமய சொற்பொழிவுகள், கச்சேரிகள், தேவார இன்னிசை கோஷ்டிகள் விழாவைச் சிறப்புறச் செய்தன. சோமாஸ்கந்தரின் வஸந்த நடனம், பஞ்சமூர்த்திகள் ரிடப வாகன வீதிஉலா, அழகிய பெரிய தேர் ஓட்டம் இவைகள் யாவரும் மறக்கமுடியாத இன்பக் காட்சிகளாகும். மக்களின் உற்சாகத்திற்கும் உதவிக்கும் எல்லையேயில்லை.

7. **குடிதண்ணீர் வசதி :-** சிக்கல், பொருள்வைமாநகர் வாசிகளுக்கு குடிதண்ணீர் இத்தேவஸ்தானத்து வற்றாத கிணறுகளிலிருந்தே கிடைக்கிறது. இக்கிணறுகளில் ஒன்றின் மதுரமான தண்ணீரை குழாய்கள் மூலமாக திருமதிலுக்கு வெளியே தேவஸ்தானத்தார் வழங்கி வருகிறார்கள். நாடோறும் காலையிலும், மாலையிலும் நூற்றுக்கணக்கான குடங்களில் மக்கள் இந்த தண்ணீரை தூக்கிச் சென்று பயன்படுத்துகிறார்கள்.

8. **சமயச் சொற்பொழிவும், திருக்குறள் வகுப்பும்:-** சேவார்த்திகளின் நலனை உத்தேசித்து உற்சவ காலங்களிலும், இதர சமயங்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நடத்தப்படுவதுடன், பிரதி வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் திருக்குறள் வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது. சென்ற மூன்று ஆண்டுகளாக இத் திருக்குறள் வகுப்பு, திருக்குறள்மணி S. P. சண்முகசுந்தரம் பிள்ளை B.A., L.T., அவர்களைக்கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

9. **வருமானம்:-** இத் தேவஸ்தானத்தின் முக்கிய வருமானம், இதற்குச் சொந்தமான சுமார் 1133 ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்களிலிருந்து கிடைப்பதே. சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்வரை சுமார் ரூபாய் ஐம்பதினாயிரமாக இருந்த வருட வருமானம் 1360ம் பசலி முதல் ரூபாய் எழுபதினாயிரத்துக்கு மேல் பெருகியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. குடிவாரப் பாத்தியதையைக் கொண்டாடி தாங்கள் தேவஸ்தானத்திற்கு ஒப்புக் கொண்டுள்ள குத்தகை தான்யத்தை செலுத்தாமல் இருப்பவர்களிடம் இருந்துவரும் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் நிலங்களைப் பொறுத்து நடந்து வருகிற வழக்குகள் முடிவடையும்போது தேவஸ்தான வருஷ வருமானம் இன்னும் உயரும் என்பதில் ஐயமில்லை.

10. **சொத்துக்கள் :-** மேற்சொல்லப்பட்ட சுமார் 1133 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்களுடன் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சில கட்டிடங்களும் இருந்து வருகின்றன. சுமார் இரண்டரை லட்ச ரூபாய் பொறுமானமுள்ள திருவாபரணங்கள், தங்க, வெள்ளி வாகனங்கள், கவசங்கள் முதலியவை உள்ளன. தற்போதுள்ள தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் N. S. சர்டிபிகேட்டுகள், பாங்க் டிபெஞ்சர்கள், டிபாசிட்டுகள் முதலியவற்றில் சேமித்து வைத்திருக்கும் சுமார் ரூபாய் முப்பதினாயிரத்துடன் தேவஸ்தான ரிசர்வ் பண்டு முதலியவை சுமார் ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ளவை.

11. **நிர்வாகம் :-** 1899–1934 வரை சுமார் 35 வருஷங்களாக இத்தேவஸ்தானத்து டிரஸ்டியாக இருந்து சுமார் 8 லட்ச ரூபாய்

வரை இக்கோவில் திருப்பணி, திருவாபரணங்கள், வாகனங்கள், கவசங்கள் முதலியவற்றில் செலவுசெய்து, பாராட்டத்தக்க தெய்வ பக்தியுடனும், உள்ளன்புடனும், மிக்க திறமையுடனும் நிர்வாகத்தை நடத்தி 5—6—1933-ல் மஹாகும்பாபிஷேகத்தையும் சிறப்புடன் நடத்திவைத்த உயர்திரு. கரு. முத்து. அழகப்ப செட்டியார் அவர்கள் மஹாகும்பாபிஷேகத்திற்குப் பின்னர் மஹா புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்குச் சென்று அங்கேயே உயிர்நீத்தபின் சென்னை அற நிலையப் பாதுகாப்பு போர்டார் 1935-ல் இந்த தேவஸ்தானத்துக்கு ஒரு ஸ்கீம் (Scheme) ஏற்படுத்தினார்கள். அதன்படி நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த மேற்படி செட்டியார் அவர்களின் புதல்வர்களில் ஒருவரான கரு. முத்து. அருணாசலம்செட்டியாரின் நிர்வாகத்தை ரத்துசெய்து, சென்னை அறநிலையப் பாதுகாப்பு போர்டார், தேவஸ்தான நிர்வாகம் திறம்பட நடப்பதன் பொருட்டு 1944ல் மேற்படி திட்டத்தை திருத்தி அமைத்து (Modified schemeன்படி) தேவஸ்தன நிர்வாகப் பொறுப்பனைத்தையும் தங்களால் நியமிக்கப்பட்ட, நிர்வாக அதிகாரி (Executive Officer) ஒருவரிடம் ஒப்புவித்தபடி இதுவரை தற்போதைய நிர்வாக அதிகாரி உட்பட ஐவர் தேவஸ்தான நிர்வாகத்தை நடத்தி வந்திருக்கிறார்கள்.

திரு. AL. கல்யாணசுந்தரம் செட்டியார், திரு. M. ஷண்முகசுந்தரம் பிள்ளை, திரு. S. ரங்கராமானுஜ நாயுடு B. A., ஆகிய மூவர் டிரஸ்டிகளாக இருந்து வருகிறார்கள். இவர்களுள் திரு. கல்யாணசுந்தரம் செட்டியார் மானேஜிங் டிரஸ்டி.

இந்த தேவஸ்தான வைபவங்களெல்லாம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குப் பூரண அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய தெய்வபக்தி நிறைந்த மெய்யன்பர்கள் எல்லோருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தேவஸ்தானத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ நவநீதேசுவர சுவாமி
தேவஸ்தானம், சிக்கல்.
28—5—1952.

N. ராஜகோபால் B. A., B. L.,
நிர்வாக அதிகாரி.

உ

# திருச்சிக்கல் தல வரலாறு

**வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர்,**
*தருமைப் பல்கலைக் கழக ஆசிரியர்.*

சோழவள நாட்டிலே தஞ்சை ஜில்லாவில் நாகப்பட்டினம் தாலுக்காவில் சிறந்து விளங்கும் தலங்கள் பல. அவற்றுள் **முருகன், சிவபெருமான், பெருமாள்** ஆகிய மும்மூர்த்திகளாலும் சிறப்புற்று விளங்குவது சிக்கல். சிக்கற்பெரும்பதியில் முருகன் '**சிங்காரவேலவர்**' என்னும் நாமந்தாங்கி எழுந்தருளியிருக்கின்றார். கலியுகத் தெய்வமாக-தமிழ்த் தெய்வமாக விளங்குகின்றமையின் நாள்தோறும் பலர் வந்து வழிபாடு செய்கின்றனர். இத்தலம் தஞ்சை-நாகூர் கிளைப் பாதையில் நாகப்பட்டினத்திற்கு சமீபத்தில் இருக்கிறது. சிக்கல் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து திருக்கோயில் இரண்டு பர்லாங் தூரந்தான் இருக்கும். திருவாரூரிலிருந்து மோட்டார் சாதனம் உண்டு. அதன் வழியாக வந்தால் சிக்கல் 'கப்பி ரோட்'டிலிருந்து திருக்கோயில் 50 கெஜ தூரந்தானிருக்கும். புகை வண்டி நிலையிலிருந்தும், மோட்டார் நிற்குமிடத்திலிருந்தும் வழிபாட்டிற்கு வரும் அன்பர்களை; பல நிறந்தீட்டி கண் கவர்கின்ற கோபுரங்கள் வலிந்தழைப்பன போல் விளங்குகின்றன. இத்தலத்தில் சுமார் மூவாயிரம் மக்கள் வசிக்கின்றனர். இத்தலத்தில் வசிப்பவர்கள் பெரும்பான்மையும் விவசாயிகளே. இங்கு நெசவுத் தொழிலும் உண்டு. கைத்தறி நெசவு வேஷ்டிகளும் துண்டுகளும் பெரும்பாலாக விற்கப்படுகின்றன. கோரைப்பாய் நெசவும் நடைபெறுகிறது. தன

வைசியப் பெருமக்களுக்கும் மற்ற பிரமுகர்களுக்கும் சில தனி விடுதிகள் இருக்கின்றன. ஊருக்கு மேற்கே அச்சா முதலியார் சத்திரமும், மேலவீதிக் கோடியில் அப்பாபிள்ளை சத்திரமும் இருக்கின்றன. அவைகள் தற்போது நல்ல நிலையில் இல்லாவிட்டாலும் சாதாரணமாக மக்கள் தங்கிவருகிறார்கள்.

**திருக்கோயில்:**—திருக்கோயில் புதுத் திருப்பணி யாதலால் மதில்களும், கோபுரங்களும் புதிய நாகரீகம் வாய்ந்த சிற்பத்திறத்தாற் சிறந்து விளங்குகின்றன. தற்கால நிலைக்கேற்ற ஆடையணி அமையப்பெற்ற சுதை வேலையே பெரும்பாலுங் காணப்பெறும். பழைய புராண வரலாற்றுச் சிற்பங்களும் புதுமுறை யிலே விளங்குவது காட்சிக்குரியது. இக்கோயில் சுற்றுமதில் செங்கல் திருப்பணி. மேலே 'சிமெண்ட்' பூசப்பெற்று கல்வரி தீட்டப்பெற்று விளங்கு கின்றது. கோயில், கிழக்கு மேற்கில் **முன்னூற்று எண்பத்தெட்டு** அடிகளும், தென் வடலில் இருநூற்று இருபத்திரண்டு அடிகளும் உள்ளது. இதன் கீழ ராஜ கோபுரம் எண்பது அடி உயரம். எழுநிலை மாடம் அமைந்தது. சுற்றுலையிலுள்ள (பிரகாரத்தில்) பெருமாள் கோயிலுக்கென்று தனித்த ஒரு சிறு கோபுரமும் உண்டு. தெற்கு, வடக்கு, மேற்குக் கோபுரங்கள் சிறியவை. மூன்று சுற்றுலைகள் தான் இருக்கின்றன. திருவீதியும், மடவளாகமும் சேர்த்து ஐந்து சுற்றுலைகளாக (பஞ்சப் பிரகாரங்களாக) எண்ணப்படுகின்றன. சிதம்பரம், காஞ்சிபுரம் போல, இத்தலத்திலும் பெருமாள் கோயிலும் சிவன் கோயிலும் ஒருங்கமைந்திருப்பது சமய ஒற்றுமையைக் காட்டும் சான்றாகும்.

கோயில்கொண்டெழுந்தருளிய சிறந்த மூர்த்தி கள் **சிங்காரவேலவர், சோமாஸ்கந்தர், வேனெடுங் கண்ணி, பால்வெண்ணெய் நாதர், கோல வாமனப்பெருமாள்** ஆகிய

இவர்கள். திருக்கோயிலுக்கு மேற்புறத்தில் ஒரு திருக்குளம் இருக்கிறது. அதற்குப் **பாற்குளம்** என்று பெயர். 'க்ஷீர புஷ்கரணி' யென்றும், 'சுதா நிதி' என்றும் வடமொழிப் புராணங்கள் பெயரிடுகின்றன. தல விருக்ஷம் **மல்லிகைச் செடி.** ஆதலால் இத்தலத்திற்கு மல்லிகாரண்யம் என்றும் பெயர். ஆகம விதிப்படித் திருக்கோயிலுக்கு அமைய வேண்டிய அர்த்த மண்டபம், ஸ்தபன மண்டபம், மஹா மண்டபம் முதலிய எல்லா மண்டபங்களும் இருக்கின்றன. ஆனால் சோபான மண்டபம் மட்டும் அம்பாள் சந்நிதியில் ஒன்றும், சிங்கார வேலவர் திருமுன் ஒன்றுமாக இரண்டுண்டு. கார்த்திகை தோறும் முருகன் காட்சியளித்தற்கென்று ஒரு மண்டபமுண்டு. அதற்குக் கார்த்திகை மண்டபம் என்று பெயர். அம்மண்டபத்திற்கு எதிரில் பெரிய நிலைக்கண்ணாடி இருக்கிறது. முருகன் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது வழிபடும் அடியவர் முன்னும் பின்னும், உள்ளும் புறமும் முருகன் விளங்குந் தன்மையைக் கண்ணாடி காட்டும். ஆலாலசுந்தரர் வந்த அன்றைய நிகழ்ச்சியைக்கூட அன்பர்கள் மனத்தில் ஆக்கும் கீழக் கோபுரத்திற்கு அருகில் வெளியிலே **கல்யாண மண்டபம்** இருக்கிறது. அது சுமார் (3000) மூவாயிரம் மக்கள் இருக்கக்கூடியது. மின்சார வசதிகளோடு கூடியது. இது இத்தலத்திற்குத் தனிப்பெருமை தரவல்லது. இது **'காரனேஷன் ஹால்'** என வழங்கும்.

**தீர்த்தங்கள்:**—திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் (மேற்கில்) பாற்குளம் என்னும் பெரிய புஷ்கரணி அமைந்து இருக்கிறது. ஸ்தல புராணப்படி முன்பு இத்தலத்திற்கு சாப விமோசனத்திற்காக விஜயஞ் செய்திருந்த காமதேனுவின் பாலினால் இக்குளம் நிறைந்திருந்ததால் இதற்கு பாற்குளம் என்ற பெயர் ஏற்பட்டு நாளடைவில் பாலக்குளம் என

வழங்கலாயிற்று. திருக்கோயிலுக்கு வடக்கில் அண்மையில் அம்ம ... குளம் (அம்மாகுளம்) என்ற தடாகமும் இருக்கிறது. இவ்விரு நேர்த்தியான குளங்களும் இவ்வூர்வாசிகளுக்கும் பெரிதும் பயன் படுகின்றன.

**சுற்றுக்கோயில்:**—கோயிலுக்குள் சென்றதும் வாயிலின் தென்புறத்தில் ஒரு விநாயகரும், மற்றொரு பக்கத்தில் தண்டபாணியும் விளங்கு கின்றனர். அவ்வாயிலையும் தாண்டி உட்புகுந்ததும் முன்னர் நவநீதப்பெருமாள் மக்களது மாயையின் கூட்டத்தை வென்ற வெற்றிக்கு அடையாளமாய் அறவடிவாய் விளங்கும் இடபக்கொடி (ரிஷபக் கொடி) பறக்கும் கொடிமரம் தோன்றும். அது வெள்ளித் தகடு வேயப்பட்டது. பின்னர் தோன்று வது தல விநாயகர் சந்நிதி. நவநீதஸ்வாமி எழுந் தருளியிருக்கும் கட்டுமலையின் அடியில் விநாயகர் அமைந் திருக்கிறார். இவருக்குச் சுந்தரகணபதி என்று பெயர். வலமாகச் சென்றால் வாகன மண்ட பங்கள் காணப்பெறும். அதன்பின் தக்ஷிணா மூர்த்தி இரண்டுண்டு. கட்டுமலையின் மேல்பக்கம் தேவகோட்டம் என்று அழைக்கப்பெறும். அடிப் பகுதியிலும் ஒரு சிவாலயம் இருக்கிறது என்று 'கர்ண பரம்பரை'க் கதை வழங்கி வருகிறது. ஆதலால் இவ்விரண்டிற்கும் இரண்டு தக்ஷிணா மூர்த்திகள் விளங்குகின்றனர். உள்மேல்பிரகாரத் தில் முதலில் விளங்கும் விநாயகருக்குக் 'கிருத்திகா விநாயகர்' என்று பெயர். கார்த்திகை மாதர் அறுவரும் முருகனுடைய வளர்ச்சி குறித்து வழி பாடாற்றியதால் அப்பெயர் பெற்றதாக வரலாறு கூறப்படுகிறது. மேலக் கோடியில், சிற்பத்திறமும் கடவுள் தன்மையும் கவினும் உடைய ஆறுமுகக் கடவுள் மயில் வாகனத்தின்மீது எழுந்தருளியிருக் கிறார். இவர் கோயில் ஒரு தனிக் கோயிலாகவே

விளங்குகிறது. அந்த மூர்த்தி முருகன் என்பதற்குக் கூறப்பெறும் பேரழகன் என்னும் பொருளுக்குப் பெரிதும் பொருந்தியதாகக் காணப்பெறுகிறது. "தோள் கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள் கண்டார் தாளே கண்டார்" என்ற கம்பர் வாக்குக்கு எடுத்துக் காட்டாக, வணங்கும் அன்பர் கண்கள் மூர்த்தியை விட்டகலினும், மூர்த்தி கண்களை விட்டகலாது இருக்கின்றது. பின்னர் திருமகள், துர்க்கை முதலிய அம்மை கோயில்களும், சண்டேசுரர் கோயிலும் அமைந்திருக்கின்றன.

பால்வெண்ணெய் நாதர் எழுந்தருளியிருப்பது ஒரு கட்டுமலை. அது கருங்கல் திருப்பணி. இது சோழன் கோச்செங்கண்ணனாற் கட்டப்பெற்றது. அவன் கட்டிய கோயில் சோழ நாட்டில் எழுபது உண்டென்று தெரிகின்றது. இதனை "எண்டோளீசர்க்கு எழில் மாடம் எழுபது செய்துகொண்டான்" என்ற வைகாவூர்த் தேவாரமாகிய சம்பந்தர் வாக்கும் வலியுறுக்கும். அவன் கட்டிய கோயில்களாக நாகப்பட்டினந் தாலூகாவில் உள்ளன கீழ்வேளூர், சிக்கல், தேவூர் என்பன. அவன் முற்பிறவியிற் சிலந்திப்பூச்சியாக திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின்கீழ் தன்னாலியன்ற தொண்டாகச் சிவலிங்க நாதன்மீது தூசி, தும்பு, வெயில், வெப்பம் விழாதபடி நூல்வலை கட்டித் தொண்டு செய்தான். இவன் செய்த தொண்டிற்கு யானையொன்று இடையூறு செய்ய அதன் துதிக்கையில் சிலந்தியாகிய இவன் நுழைந்தான். நோய்பொறுது யானையும் துதிக்கையை மோத இவனும் இறந்தான். யானையும் இறந்தது. இறைவனுக்குச் செய்த தொண்டின் பெருமையால் சிலந்தி மறுபிறவிக்கண் அரசனாயிற்று. முற்பிறவி வாதனை தாக்க இவன் கட்டிய கோயில்கள் எல்லாவற்றையுமே யானை

யேற்றாத கோயில்களாகவே ஆக்கினான். இவன் பணிசெய்த கோயில்கள் யானை யேறாப் பெருங் கோயில்கள் என்றே அழைக்கப்பெறும். அத் தகைய யானையேறாப் பெருங்கோயில் ஆகிய கட்டு மலை மீது கிழக்குப் பார்த்த சந்நிதியாகப் பால் வெண்ணெய் நாதரும் ஸ்தபன மண்டபத்தில் சந்திர சேகரரும் கல்யாணசுந்தரரும் அவருக்கு வலப்பா கத்தில் சோமாஸ்கந்தரும், இடது புறத்தில் நடராஜருமாக விளங்குகின்றனர். நடராஜருக்குப் பக்கத்தில் தான் தெற்கு முகமாகச் சிங்காரவேலவர் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறார். அவரது திருக்கோயில் சுற்றுமுற்றும் சலவைக் கல் பரப்பப் பெற்று, வாயில் இருமருங்கிலும் பெரிய மயில் தீட்டிய சலவைக் கல் பதிக்கப்பெற்று விளங்கு கிறது.

மலையை விட்டுக் கீழிறங்கியதும் திருப்பள்ளி யறை. இதில் உள்ள கண்ணாடி ஊஞ்சல் கண்ணைக் கவரும் தன்மையது. இதைச் சேர்ந்தாற்போல் உள்ளது அம்மையின் திருக்கோயில். அம்மை “வேனெடுங்கண்ணி” என்று அழைக்கப் பெறுவர். தமிழ்மறைச் சிறுவர் ஞானசம்பந்தப் பெருந்தகை யாரும் “வேலொண் கண்ணியினளையொர் பாகன் வெண்ணெய்ப் பிரான்” எனக்கூறுவதால் அம்மை திருநாமம் “வேலொண் கண்ணி” என அறியப் பெறும். வடமொழியில் “சக்தியாயதாக்ஷி” என வழங்குகிறது. அதுவும் வேல்போன்ற நெடுங்கண் களை உடையாள் என்ற காரணம் பற்றியே இருத் தல் அறிந்து இன்புறத் தக்கது.

இங்கு மரகத லிங்கம் ஒன்று உண்டு. அதற்கு “மரகத விடங்கர்” என்று திருநாமம். அவ்வுருவம் திருவாபரணத் திருவறையில் சேமமாக வைக்கப் பெற்றுள்ளது.

நவநீத சுவாமியின் வடபுறம் பிரகாரத்துக்குக் கிழக்கு நோக்கிய சந்நிதியாக "கோலவாமனப் பெருமாள்" சேவை சாதித்து அருளுகின்றார். நின்ற திருக்கோலம், வாமனவதாரம் எடுத்து, சிவபக்தனான மஹாபலியை அழிக்கச் சிவபெருமானிடம் வரம் பெறக் கயா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய எழுந்தருளினார் என்றும், அதனால் "கயா மாதவர்" என்ற பெயர் உண்டு என்றும் புராணம் கூறுகிறது. தாயாருக்கு, "கோமளவல்லித் தாயார்" என்பது திருநாமம். பெருமாள் சந்நிதியில் சேஷாசனத்தின் மீது வைகுண்ட நாதனுடைய வடிவம் வழிப்போவாரையும் வலிந்து ஆட்கொண்டு கோலவாமனன் திருவடியில் திளைக்கச் செய்கிறது. பெருமாளுக்கு வடமேற்கு மூலையில் ஆஞ்சநேயர் ஆலயம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது.

தேரடியில் ஒரு விநாயகர் ஆலயம் இருக்கிறது. அவ்விநாயகருக்கு "இரத்தின விநாயகர்" என்பது திருநாமம். தெற்குவீதி கோடியில் தென்மேற்கு மூலையில் ஒரு ஐயனார் ஆலயம் இருக்கிறது. அந்த ஐயனாருக்கு "ஆபத்துக் காத்த ஐயனார்" என்பது திருநாமம். அந்த திருக்கோயில் இருக்கும் இடமும், முன்புள்ள குளமும், குதிரையும் கண்கவர் வனப்பின. அந்தக் கோயில் கரு. முத்து. அழகப்ப செட்டியாரால் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது. மேலவீதி வடகோடியில் "மூத்து மாரியம்மன்" கோயிலும், பெரியகோயில் சந்நிதியில் "பிடாரி கோயிலும்" விளங்குகின்றன. கிராம தேவதைகளின் கோயில்கள் வீதியிலேயே அமைந்திருத்தல் இத்தலத்திற்குள்ள தனி அழகு.

**சிற்பம், சித்திரம் முதலியன :—**சிங்காரவேலவர் சந்நிதியிலிருக்கும் சுற்றுச் சுவர்களிலும், கார்த்திகை மண்டபத்துக்கு எதிரிலுள்ள சுற்றுச் சுவர்


களிலும் பூ வடிவங்கள் அமையப் பல நிறங்கள் பூசப்பெற்றிருப்பது காண்பார்க்குக் களிப்பையும் புத்துணர்ச்சியையும் பிறப்பிக்கவல்லது. உட் பிரகாரத்தில் பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாள் முதல், மாரீச வதம் வரையில் உள்ள இராமாயண வரலாறுகளைத் தெரிவிக்கின்ற சுதை வேலைச் சிற்பங்கள் பல அமைந்திருக்கின்றன. மற்றும் "துருவ மகரிஷி தவம், கஜேந்திர மோட்சம், பதஞ்சலி, வியாக்ரபாதர், நடராஜர், ஆறுமுகக் கடவுள், தியாகராஜா, தட்சிணாமூர்த்தி" முதலிய சுதையாலான திருவுருவங்களும் தோற்றமளிக்கின்றன. பிரகாரத்தின் மேல் மண்டபத்திலும் சுவர்களிலும் கந்தபுராண வரலாறுகள் பல வர்ண சித்திரங்களாக எழுதப் பெற்றுள்ளன. கல்யாண மண்டபத்தில் (காரனேஷன் ஹாலில்) 'பார்வதி கல்யாணம்' சித்திரம் நன்றாக அழகுபெற உயிர் ஓவியமாக எழுதப்பெற்றுள்ளது. சிற்ப சித்திரங்கள் ஒவ்வொன்றும் ஊன்றி யறிந்து இன்புறத் தக்கன.

இத்தலத்திற்கு இரண்டு தேர்கள் இருக்கின்றன. அவை சித்திரை மாதத் திருவிழாவிலும், ஸ்கந்த சஷ்டித் திருவிழாவிலும் ஓடும். பவழக்கால் சப்பரம் ஒன்றுண்டு அது ஆடிப் பூரத் திருநாளுக்குப் பயன்பட்டு வந்தது. இந்த மர ரதம் திருக் கல்யாண ரதம் என்று அழைக்கப் பெறுகிறது.

கோயிலில் குத்துவிளக்கு, கரணைவிளக்கு, சர விளக்கு முதலிய வெள்ளியாலான வேலைப்பாடு அமைந்த பாத்திரங்கள் மிகுதியும் உள்ளன.

இத்திருக்கோயிலுக்கு பெரு மதிப்புள்ள திருவாபரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் பெரும் பாலானவை கரு. முத்து. அழகப்பச் செட்டியார்

# சிக்கல் தல மூர்த்திகளும், கலைச் சிற்பங்களும்.



திருக்கல்யாண மண்டபம்



ராஜகோபுரத் தோற்றம்




ஸ்ரீ சிங்காரவேலவர்



ஸ்ரீ சந்திரசேகரர்





ஸ்ரீ சேஷநாதர்



நவீன கார்த்திகைப் பல்லக்கு

# கோபுரத்தில் சுதைப் பகுதிகள்








கோயிலை அழகுபடுத்திய கிளி




தல புராணத்தை விளக்கும் சிற்பம்




தங்க குதிரை வாகனம்




தங்க ஆட்டுக்கடா வாகனம்



தங்க தொட்டில்



தங்க மயில் வாகனம்



பள்ளியறைக் கண்ணாடி ஊஞ்சல்

அவர்களாலேயே செய்விக்கப் பெற்றன. அவற்றுள் சிங்காரவேலவர் பொற்கவசமும், பொன் அலங்கார மயில் இழைப்பு வேலைப்பாடுள்ள சாயல் கொண்டைக் கிரீடமும், ரங்கூன் வைர வேலும் உள்ளன. அவை மிகுந்த அழகு வாய்ந்தன.

இந்தத் திருக்கோயிலுக்குச் சிங்காரவேலவர் திருவுலாக் கொள்ள, தங்க மஞ்சம், தங்க ஆட்டுக் கிடா, மயில், குதிரை வாகனங்களும், வெள்ளி இடப வாகனங்களும், மஞ்சங்களும், அம்பிகைக்குத் தங்கம் பூசப்பெற்ற வெள்ளிக் கவசம் ஒன்றும் உள்ளன. வெள்ளி வேலைசெய்த குடை, கொடி, ஆலவட்டம் முதலிய எடுபிடிகளும், பதினாறு வகை யான உபசாரப் பொருள்களும் இருக்கின்றன.

**புராண வரலாறு – தல மகிமை:—** முன்னொரு காலத்தில் பன்னிரண்டு ஆண்டு மழையின்றிப் போயிற்று. "விசும்பில் துளி வீழின் அல்லால் மற் றாங்கே, பசும்புல் தலைகாண் பரிது" என்ற பொய் யில் புலவரின் வாக்கு மெய்யாயிற்று. காமதேனு வும், புல் அகப்படாது தவித்தது; பசியால்வாடியது; எங்கும் அலைந்தது. இறுதியில் செத்த நாய் ஊனைத் தின்று உயிர் தாங்கிற்று. சிவபெருமான் காம தேனுவைப் பார்த்து "நீ நாய் ஊன் தின்றாவது உயிர் தாங்க எண்ணியதால் புலி முகத்தோடு வாழ்க" எனச் சபித்தார். காமதேனு கவலை கொண்டு சாபம் நீக்குவது எப்படி? என்று திருவடி களில் வீழ்ந்து வணங்கித் தவித்தது. திருவருள் பெருகிய இறைவன், சிக்கலுக்குச் சென்று பாற் குளத்தில் மூழ்கி மல்லிகையின் கீழ் வசித்தால் இப் பாவம் கழிய, உன் புலிமுகம் நீங்கும் என்று அருளி னார். காமதேனு அவ்வாறே செய்து தன் உண்மை வடிவம் உற்றது. மகிழ்ச்சியால் உடல் பூரித்தது. பால் பெருக்கிற்று. பாலால் குளம் நிறைந்தது.

அதுமுதல் அமிர்த தடாகம் பாற்குளம் ஆயிற்று. சிவபெருமானுடைய ஆணையால் சிக்கலை அடைந்த வசிட்டர், அந்த பாலில் இருந்து உண்டான வெண்ணெயினால் சிவலிங்கத் திருவுருவமைத்து வழிபாடு இயற்றினர். மகிழ்ந்த பெருமானும் அச்சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு நின்று, "வேண்டியதைக் கேளும்" என்றார். "தான்பெற்ற பேறு, வையகமும் பெறவேண்டும்" என்ற கருணை வழிந்த கருத்துடைய வசிட்டர் இச் சிவலிங்கத்திலேயே எப்போதும் எழுந்தருளி எல்லோருக்கும் இம்மை, மறுமைப் பயன்களை அளித்தருள வேண்டுமென விண்ணப்பித்தனர். "வேண்டுவார் வேண்டுவதே ஈயும்" விண்ணவர் பெருமானும் அவ்வாறே விளங்கி வருவாராயினர். வசிட்டரும் வழிபாடு ஆற்றி வருவாராயினர். அவ்வாறே இந்திரன் சூழ்ச்சியால் வந்த திலோத்தமையைக் கூடித் தவமிழந்து தவித்த விசுவாமித்திரரும், வாமதேவ முனிவரைக் கண்டு மன அமைதிக்குரிய இடம் எதுவென வினவினர். அவர் அறிவிக்க, இத்தலத்திற்கு வந்து நவநீத இலிங்கத்தில் இறைவனைக் கண்டு பாற்குளத்தில் நீராடி வழிபாடு செய்து வந்தனர். தவமும், மன அமைதியும் பெருகுவது கண்டு, பாற்குளக் கரையில் அரசமரம் வைத்து வளர்த்து அதனடியில் தவம்செய்து வருவாராயினர். அவ்வாறேவில்வலன், வாதாபியைக் கொன்ற பாவந்தொலைய, அகஸ்தியர் இத்தலத்தை அடைந்து நவநீத ஈசனை தரிசித்துப் பாவம் நீங்கப் பெற்றார். அம்மட்டோடு அன்றி நவநீதர் கோயிலுக்குத் தெற்கே ஒரு குளம் வெட்டி, அதன் கரையில் ஒரு சிவலிங்கம் நிலை பெறுவித்து வழிபாடுகள் செய்து வருவாராயினர். அதுபோலக் காத்தியாயனர் என்ற முனிவரும், கோயிலின் கீழ்ப் பாகத்தில் சிவலிங்கம் நிலைபெறுவித்து வழிபட்டனர். இவ்வாறு பல முனிவர்களும் தத்தம் பாவம் கழிய, தவம் பெருக, சித்தம் நிலைப்பட, சிக்கலை

அடைந்தனர் என்ருல் தலப் பெருமை எவ்வளவு என்று கூறவும் இயலுமோ?

வசிட்டர் வாழ்ந்து வருங்காலையில் குஷ்டரோகி ஒருவனும், திருடன் ஒருவனும், பல்லும் நகமும் சொத்தை விழுந்தவன் ஒருவனும் முனிவரை வணங்கி எங்களுக்கு இத்துன்பம் நீங்க அருள் செய்ய வேண்டும் என்று இரந்தனர். வசிட்டர் "நவநீத லிங்கத்தைப் பார்த்து வாருங்கள்; உங்கள் நோய் நீங்கும்" என்ருர். அவர்கள் அவ்வாறே செய்யப் பாவங்கள் பறந்தன; நோய் போயிற்று; இறுதியில் முத்தியும் பெற்றனர். நவநீதக் கடவுளை வணங்கிஞற் பிணி நீங்கும் என்ற பெருமையை நமது சைவங் காத்த தவக் குழந்தையாகிய ஞானசம்பந்தரும்,

"சிட்டன் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் செழுமாமறைப்
பட்டன் சேவடி யேபணிமின் பிணி போகவே"

என்றருளிச் செய்கிருர்.

ஒரு சமயம் அயோத்தியாண்ட முசுகுந்த சக்ரவர்த்தி குதிரைமேலேறி வேட்டையாடச்சென்ருன். அரசன் ஏறிச்சென்ற குதிரைக் குளம்பு பட்டு ஒரு பிராமணன் இறந்தான். அரசன் அதையறிய வில்லை. பிரமஹத்தி அரசனைப் பிடித்துக் கொண்டது. அரசன் மயங்கி அமைச்சர்களை நோக்கி 'இது நீங்கும் உபாயம் என்ன' என்று கேட்டான். அவர்கள் கூறியபடி எத்தனையோ தானதருமங்கள் செய்தும் பாவம் நீங்கியபாடில்லை. அவன் ஆடாத தீர்த்தம் இல்லை; அலையாத தலங்கள் இல்லை. பயனும் ஒன்றும் இல்லை. வருந்திய அவன், தனது குல குருவாகிய வசிட்டரைக் கேட்டான். அவர் அறிவித்தபடி சிக்கல் நகரம் சேர்ந்து பாற்குள நீராடி நவநீதக் கடவுளைத் தரிசித்து நற்பேறு

பெற்றான். மன அமைதி பெற்ற மன்னன் மகிழ்ச்சி மேலீட்டால் மண்டபங்கள், கோபுரம், மாளிகைகள் எல்லாம் கட்டுவித்தான். சிக்கல் நகரை தேவ நகரமாகச் செய்தான். ஆனந்த நடராஜ மூர்த்தியை நிலைபெறுவித்தான். சித்திரை திருவிழாவைச் சிறப்புறச் செய்தான். தேர்விழாக் கொண்டாடினன். இவ்வாறு, இறை பணிபுரிந்து இறுதியில் முத்தியும் பெற்றான்.

இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், சித்தர்களும், கந்தர்வர்களும் தனித் தனியாகச் சிவ லிங்கம் ஸ்தாபித்து வழிபாடியற்றிச் சிவப்பேறெய்தினர். நவநீதப் பெருமானுக்குக் கீழ்ப்பாகத்தில் திருமகள் நிறுவிய சிவலிங்கம் ஒன்றுண்டு. அதன் பக்கம் இலக்குமி தீர்த்தம் இருக்கிறது. நவநீதருக்கு மேல்பாகத்தில் கயை யென்னும் தீர்த்தம் இருக்கிறது. அந்தத் தீர்த்தத்தில் கோலவாமனப் பெருமாள் மூழ்கித் தவஞ்செய்து கயா மாதவன் என்ற பெயரை அடைந்தார். இத் தலத்தின் தெற்கில் விருத்த காவேரி யென்னும் நதி ஓடுகிறது. அது இப்போது ஓடம்போக்கியென வழங்குகிறது. அந் நதிக்கரையில் குமாரக்கடவுள் தன் வேலால் ஒரு சிவலிங்கம் தாபித்தார். இவ்வாறு சூழச் சிவலிங்க மாகத் தேவர்களும் வழிபாடுசெய்து, பேறுபெற்ற இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம், என்ற முத்திறச் சிறப்பும் பெற்று முதற்றலமாக விளங்குகிறது.

**வழிபாட்டின் பயனாக ஞானசம்பந்தர் வகுப்பன :—** வெண்ணெய்ப் பெருமான் திருவடியை அறிவு மயமாக இருந்து தியானித்தல் வேண்டும். அங்ஙனம் தியானிப்பவருடைய வினைகளில் அழிவன அழியும், வலியொடுங்குவன ஒடுங்கும், அடியார்கள் அல்லலறும், பாவங்கள் நீங்கும், திருமகள் எப்போதும் சேர்வள், பிணிநீங்கும் என்று சொல்கிறார்.

பெருமானை வழிபடுவார் அடையும் பயன்களை ஒவ்வொரு பாசுரத்தும் விடாது சொல்லியிருத்தல், மிகவும் வியத்தற்குரியது. மனத்திற் பதித்தற்குரியது. வணங்கிப் பயனடைதற்குரியது.

**உற்சவங்கள் :—** நவநீதப்பெருமானுக்கு மாத சிவராத்திரி முதலிய காலங்களிலும், பிற விசேட காலங்களிலும் மகாபிஷேகம் நடக்கும். கார்த்திகைகள் தோறும், சிங்காரவேலவப் பெருமானுக்கு மகாபிஷேகம் நடைபெறும். பால், இளநீர் முதலிய அபிஷேகப் பொருள்களை அன்பர்கள் தாங்கி அணியணியாக வருங் காட்சி கருங்கல் மனத்தையுங் கரையச் செய்யும்.

நவநீதப் பெருமானுக்குச் சித்திரை மாதம் (பிரமோற்சவம்) திருவிழாக கொண்டாடப் பெறுகிறது. அப்போது பெரிய தேர் ஓடும். அது பத்து நாள் திருவிழா. ஐப்பசி-மீ சிங்காரவேலவருக்குக் கந்தசஷ்டித் திருவிழா நடைபெறும். அத்திருவிழாவில் 6-ம்நாளன்று திருத்தேர்விழாநடக்கும். சிங்காரவேலவர் திருத்தேருக்கு எழுந்தருளும்போது வெண்பட்டுச் சுற்றி அதன்மேல் பொற்கவசம் சாத்துவது வழக்கம். தேர்விழா முடித்து வேலவர் மலைக்கு மேலவரானதும் சாத்துபடி களைந்தால் பெருமான் திருமேனியும் திருமேனியிற் சாத்திய பட்டும் அணிகளும் வியர்வையால் நனைந்திருக்கும். அதனை இப்போதும் காணலாம் என்று சொல்லப்படுகிறது. மற்றும் வேல் நெடுங்கண்ணியின் திருமுன்னர்ச் சிங்காரவேலவர் செவ்வேல் பெற்ற பின்னர்த் திருமுகத்துச் சிறு வியர்வு, முத்து முத்தாகத் தோன்றுவதைக் கற்பனையென்று கருதுவார்கூட நேரிற்கண்டு களிக்கலாம். இந்த விழா நாட்களில் தான் வேலவர் தங்க வாகனங்களின் மீது எழுந்தருளிக் கருணை வெள்ளம் வழங்குவர். இந்த விழா

வைக் காணத் தொலை தூரங்களிலிருந்தும் பதினாயிரக் கணக்கான மக்கள் வருகிறார்கள். இவ் விழாவில் ஏழிசையாய் இசைப் பயனாய் இருக்கும் இறையின்பத்தை எய்த வருபவர்கள் மன ஒருமைப் பாட்டை யளிக்கும் இசையின்பத்தையும், அடக்கமும் அன்பும் அளிக்கும் புலவர்களின் பேச்சின்பத்தையும் பெற்றுச் செல்கிறார்கள். மற்றும் ஒவ்வொரு கார்த்திகைக்கும் வேலவர் எழுந்தருளி உட்பிரகாரம் வலம் வருவர்.

**கல் வெட்டுக்கள் :—** இத் தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் எட்டு உள்ளன. அவற்றுள் இரண்டு கோல வாமனப்பெருமாள் விஷயமானவை. ஒன்று சிங்கார வேலவருக்குத் தொடர்புடையது; மற்றவை நவநீத சுவாமியைப் பற்றியவை.

இவற்றில், கோலவாமனப்பெருமாளுக்கு, கி.பி. 1447-ம் ஆண்டில், விஜயநகர அரசர் மல்லிகார்ஜுன மகாராஜாவின் சேனாதிபதியான தக்ஷிண தண்ட நாயகர் என்பவர் சிக்கல் வாசிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் பதி நத்தம், திருநயநல்லூர் என்னும் இரு கிராமங்களைத் தேவதானமாக அளித்தனர். அதன் வருமானத்தையும், குடிவார வருமானத்தையும் கொண்டு கோயிலை நிர்வகித்து வர வேண்டும் என்று எழுதியிருக்கின்றார். இன்னும் சிக்கலில் 12 வேலி நிலத்தைத் தினசரி நைவேத்தியத்திற்காக விட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது. ஆயர் பிள்ளை என்பவர் அமுதுபடிக்காக நிலம் விட்டார் என்றும் ஒரு சாஸனம் கூறுகிறது.

நவநீதரைப் பற்றிய சாஸனங்களில் இரண்டு வடமொழியில் எழுதப்பெற்றன. அவை தலபுராண வரலாற்றைத் தெரிவிக்கின்றன. மற்றொன்று கி. பி. 1563-ல் அரிராமராஜய்யர் குமாரர் கிருஷ்ண

மரசய்யர் என்னும் சிற்றரசன், திருவாரூரிலிருந்து வந்த ஞானப்பிரகாச பண்டார ஸ்வாமிகளுக்கும், அதிதிகளுக்கும் பகற்காலங்களில் அன்னம் அளிக்க நிலம் விட்டான் என்று சொல்கிறது. ரங்கப்பராஜா என்பவர் வெண்ணெயர் காணி என்னும் பெயரிட்டு அரை வேலி நிலத்தைக் குடியிருப்பு நத்தமாகக் கொடுத்து அதில் வரும் வரும்படியைக் கொண்டு கோயிலுக்குப் பூசை நடத்தி வரவேணும் என்று விசுவநாத நாயக்கர் மகன் பொன்னம்பலம் வெட்டிய சாஸனம் கூறுகிறது.

கி. பி. 1442-ல் ஏற்பட்ட சாஸனம் மாறவன்மர் வீரபாண்டிய தேவர் செய்த தருமமாகப், பால் வெண்ணெய் நாதர் பூஜாகாலங்களில் வேதம், உருத்திரம் ஓதவும், தேவாரத் திருப்பதிகம் பாடவும், திருப்பணிகள் செய்யவும் மூலதனமாக 2000 பணம் அளித்ததாகத் தெரிவிக்கிறது.

முருகனைக் குறித்த சாஸனமானது 1530-ல் இருந்த விஜயநகரச் சக்கரவர்த்தி அச்சுத தேவ மகாராஜாவால் ஆனது. அதில் சிங்காரவேலவருக்கு நித்யம் பதினைந்து விளக்கேற்றவும், நித்ய பூசைக்கும், கார்த்திகைச் சாமிப் புறப்பாட்டுக்குத் தீவட்டி எண்ணெய்க்கும், கந்தசஷ்டி உற்சவத்திற்கும் ஆக பொன் நாணயங்கள் பலவற்றைக் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறது.

**இச் சாஸனங்களிலிருந்து அறியப்பெறும் சில உண்மைகள் :—** தமிழ்ச் சாஸனங்களில் நவநீதப் பெருமான், பால் வெண்ணெய் நாதர், பால் வெண்ணெய் நயினர் என்றே வழங்கப் பெற்றுள்ளார்.

தலம், வசிட்டாச்சிரமும், கயாசிரஸ், தேவசானித்யபுரம் என்ற மறு பெயர்களையுடையன.

பூசித்தவர்கள் வசிட்டர், விசுவாமித்திரர், முசுகுந்தன், நாரதர், கௌதமர், காத்யாயனர், அகஸ்தியர், காமதேனு ஆகிய இவர்கள்.

ஸ்தல விருக்ஷத்தைப் பற்றிய புராணம், மல்லிகை என்று சொல்லியிருக்கவும், நவநீதர் மூலஸ்தானத்து மேற்குப் பக்கத்து அடிப் பாறையிலுள்ள சாஸனம் 'அரசு' என்று அறிவிக்கிறது. புராணம், விசுவாமித்திரர் தவஞ்செய்ய வந்தபோது அரசு மரத்தை வைத்தார் என்றும், மல்லிகை காமதேனு வருவதற்கு முன்பே வசிட்டர் வருவதற்கு முன்பே இருந்தது என்றும் சொல்லுகிறது. ஆதலால், அரசும், மல்லிகையும் ஸ்தல விருக்ஷங்கள் என்றுகொள்ள இடமிருக்கிறது. இப்போது மல்லிகை உட்பிரகாரத்தில் தக்ஷிணமூர்த்திக்குப் பக்கத்திலும், அரசு பாற்குளக் கீழ்க்கரையிலும் இருக்கின்றது.

சிங்கார வேலவர் குமாரசாமி நயினர் என்று வழங்கப் பெறுகிறார். இன்னும் பக்த வினைதீர்த்த குமாரசாமி நயினர் என்று குறிப்பிடப்பெற்றமை ஊன்றி யறிந்தின்புறற்குரியது.

1447 (கி. பி.)ல் ஏற்பட்ட சாஸனத்தில் "சோழ மண்டலத்திலிருக்கும் செய மாணிக்க வளநாட்டு உசவாடி என்றும், பிராமண அக்கிரகாரம் என்றும் வழங்கப்படும் ஸ்ரீ சிக்கல் கிராமத்தில்" என்று காணப்பெறுவதால் சிக்கல், சோழ மண்டலத்து, செய மாணிக்க வளநாடு என்னும் வளநாட்டைச் சார்ந்தது என்பதும் உசவாடி யென்னும் மறு பெயருடையது என்பதும், பிராமணர் நிறைந்தது என்பதும் அறியப்பெறும். ரங்கப்ப ராஜாவின் சாஸனத்தால் நெசவாளிகள் மிகுந்திருந்தமையும் நறித் தொழில் தழைத்தோங்கி இருந்தமையும் அறியலாம்.

மேற்குறித்த ரங்கப்ப ராஜாவின் சாஸனம் விட்ட நிலத்தின் நான்கெல்லை கூறும்போது 'அக்க சாலைப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்கு' என்று ஓர் எல்லையைக் குறிப்பிடுகிறது. அக்கசாலையென்பது நாணயங்கள் அடித்த இடம். நாகப்பட்டினம் சோழ ராஜதானியாக இருந்தபோது சிக்கலில் அக்கசாலை இருந்திருக்கலாம். அதன் அருகாமையிலிருந்ததால் விநாயகரும் அக்கசாலை விநாயகராயினர். இதற்குச் சான்ருக இவ்வூரையடுத்துள்ள பொருள் வைத்த சேரியும் (பரவச் சேரியும்) அக்கசாலையிலடித்த நாணயங்களைச் சேமித்து வைத்த இடமாக இருக்கவேண்டும் என்று ஊகிக்க இடந் தருகின்றது.

**வருமானமும் — கட்டளைகளும் — கட்டணங்களும் :—** இக்கோயிலுக்குச் சொந்தமான நஞ்செய் புஞ்செய் நிலங்களின் வருமானங்களைக் கொண்டு கோயிலின் நித்திய பூசையும், விசேட உற்சவாதிகளும் நடைபெறுகின்றன. வேறு கட்டளைகளோ, உபயங்களோ நிலைத்தனவாக இல்லை. கார்த்திகை உபயங்கள் சில அன்பர்களால் அவரவர்கள் குடும்பப் பொறுப்பில் முறையே நடைபெற்று வருகின்றன. கார்த்திகை தோறும் கோனுபட்டு மெ. அ. ரூம. சுப்பிரமணியஞ் செட்டியாரின் ஆதரவில், காலஞ்சென்ற கார்த்திகை அம்மாள் செய்து வந்த சமாராதனையை சென்ற ஓராண்டாக அந்த அம்மாள் பேரன் மாயவரம் க. வெ. கிருஷ்ணமூர்த்தி அய்யர் நடத்திவருகிருர்.

அர்த்த சாமத்தில் சம்பா நிவேதனம் செய்து கோயிலில் தேசாந்திரிகளுக்குக் கொடுக்கும்படியாகக் கண்ணுச்சி வீடு இரங்கசர்மிப் பிள்ளை கட்டளையொன்று அவர்கள் பொறுப்பிலேயே நடைபெற்று வருகிறது.

**திருப்பணி :—** இத்திருக்கோயில் கருங்கல் திருப்பணி. சுற்றுமதில் செங்கற்றிருப்பணி. இதனைச் செய்தவர்கள் 1899-ம் ஆண்டிலிருந்து 1934-வது ஆண்டு வரை தர்மகர்த்தாவாயிருந்தவரும், இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகா, ஆத்திக்காடு தெக்கூரில் வசித்தவரும், தனவைசிய குல திலகருமான ஸ்ரீ கரு. முத்து. அழகப்பச் செட்டியார் அவர்கள். அவர்கள் நிறைந்த நல்லெண்ணத்தோடு – சிவத் திருவருளோடு – திருப்பணி முற்றுவித்ததை 'காசியினிறத்தல் நேர்படி னல்லது, செயற்கையின் எய்தும் இயற்கைத் தன்று' என்ற குமர குருபர அடிகள் திருவாக்கின் அருமைப்பாட்டிற்கு அமைய, கும்பாபிஷேகமுடித்துக் காசிக்குச் சென்ற அவர்கள் காசியிலே மரணம் வாய்க்கப்பெற்று சிவப்பேறெய்தியதால் தெளிவாக அறியலாம். திருப்பணி செய்த சிவத்திரு – அழகப்பச் செட்டியார் திருவுருவமும், அவர் மனைவியார் திருவுருவமும் வேனெடுங்கண்ணி கோயில் மகா மண்டபத்துத் தூண்களிரண்டில் வேலைப்பாடுற அமைக்கப் பெற்றுள்ளன.

இன்னும், பூலாங்குறிச்சி திருவாளர் இராமநாதன் செட்டியார் அவர்களால் சிங்காரவேலவர்க்குப் பொற் கவசமும், பூப்பணிக்குச் சிறந்த நந்தவனமும் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆ-தெக்கூரைச் சேர்ந்த ஆறு. நா. குடும்பத்தாரால் பசுமடம் நிறுவப் பெற்று பால் தொண்டு இடையறுது நடைபெற்றுவருகிறது.

**வேத பாடசாலை :—** இராமநாதபுரம் ஜில்லா பள்ளத்தூரைச் சேர்ந்த நெ. நெ. குடும்பத்தாரால் வேதபாடசாலை நிறுவப்பெற்று வேதபாராயணம் நடந்துவருகிறது. உற்சவ காலங்களில் சுவாமி

புறப்பாட்டுக்கு வேத கோஷ்டியும் நடத்திவருகிறார்கள். தேவாரம் தெளிந்தறிந்த தேசிகர் ஒருவர் தினந்தோறும் இத்திருக்கோயில் சந்நிதியில் திருப்பதிகத் தொண்டு செய்துவருகிறார்.


இக்கோயிலில் நாள்தோறும் காலை, உச்சியம் போது, மாலை, சந்திகாலம், நடுநிசி ஆகிய ஐந்து கால பூஜைகள் நடந்துவருகின்றன. அண்ணலின் அருள் பெற வரும் அன்பர்கள் வசதியை முன்னிட்டு அஷ்டோத்திர அர்ச்சனைக்கு ஒன்றேகால் அணு என்றும், சகஸ்ரநாமத்திற்கு ஏழணு என்றும் கட்டணங்கள் விதித்து அர்ச்சனைச் சீட்டுகளும் அச்சிடப் பெற்றிருக்கின்றன.

**திருச்சிக்கல் :—** முனிவர் பலரால் வழிபாடு செய்யப்பெற்றது. அயோத்தியையாண்ட முசுகுந்த சக்ரவர்த்தி முதன் முதலாக இவ்வாலயத்தைக் கட்டுவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பின்பு கி. பி. 4-ம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட சிலந்திச் சோழன் என்னும் மறுபெயர் வாய்த்த கோச்செங்கண்ண மன்னன் இக்கோயிலைத் திருப்பணி செய்வித்தான். கி. பி. 6-வது நூற்றாண்டில் சைவம் பரப்பிய தவப்புதல்வர் திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளி நவநீதப் பெருமானை வணங்கி இறைவன் பெருமையையும், வழிபட்டார் எய்தும் பயனையும் அமைத்துப் பதிகம் பாடியிருக்கின்றார். எழுநூறாண்டுகளுக்கு முன்பிருந்த விஜய நகர அரசர்களாலும் நிலங்களும் பொன்னும் தேவதானமாக வழங்கப்பெற்றன. சுமார் ஐந்நூறாண்டுகளுக்கு முன் நிலவிய ஞானச் செல்வர் அருணகிரிநாதர் மூன்று திருப்புகழ்ப் பாசுரங்களை அருளிச் செய்திருக்கிறார். இச்சான்றுகள் இத்தலம் மிகமிகப் பழமையானது என்பதை விளக்குவனவாம்.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் வெண்ணைப் பெருமானை வணங்கி ஞானசம்பந்தர் கூறிய நலங்களை நாமும் பெறுவோம். நானிலமும் பெறுக சிங்கார வேலவரைத் தரிசித்துச் சிந்தைக்கோயிலில் சிறக்க இருத்துவோம். அறிவு விளக்கை யணையாது அசையாது வைப்போம். வேலவர் நம் சிந்தைக் கோயில் மேவியதும் தீவினையகலும்; வறுமை மடியும்; வாழ்வு பெருகும்; முருகன் அருள்முதல் கிடைக்கும்; அகமகிழ்ந்து வாழலாம்.

"வெறிகொள் உலுத்தர்க்கு என்பாடு கூறிடும் மிடிதீர
மிகவறு மைப்பட்டு உன்பாத தாமரை
சரண மெனப்பற்றும் பேதை யேன்மிசை
விழிய ருள்வைத்துக் குன்றாத வாழ்வையும் அருள்வாயே"

என்ற அருள்வடிவடைந்த அருணகிரியார் வாக்குப் பொய்யாகுமா! கலியுகவரதன் கழலினை காணுக; களிப்புறுக; இம்மை மறுமை இன்பங்களை எய்துக.



இணைப்பு:

# பாடல் தொகுதி

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

கச்சையூர் காவங் கழுக்குன்றம் காரோணம்
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சியூர் கச்சி சிக்கல் நெய்த்தான(ம்) மிழலை
இச்சையூ ரெய்தமான் இடையாறிடைமருதே.

## திருஞானசம்பந்தர் தேவாரம்

### திருச்சிக்கல்: பண் – இந்தளம்

வானுலா வும்மதி வந்துலா வும்மதில் மாளிகை
தேனுலா வும்மலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கநினை வார்வினை யாயின நையுமே. (1)

மடங்கொள்வா ளைகுதி கொள்ளும் மணமலர்ப் பொய்கைசூழ்
திடங்கொள் மாமறை யோரவர் மல்கிய சிக்கலுள்
விடங்கொள் கண்டத்துவெண் ணெய்ப்பெரு மானடி மேவிய
அடைந்துவா ழும்அடி யாரவர் அல்லல் அறுப்பரே. (2)

நீலம்நெய் தல்நில விம்மிய ருஞ்சுனை நீடிய
சேலுமா லுங்கழ னிவ்வளம் மல்கிய சிக்கலுள்
வேலொண் கண்ணியி னளையோர் பாகன்வெண் ணெய்ப்பிரான்
பாலவண் ணன்கழ லேத்தநம் பாவம்ப றையுமே. (3)

கந்தமுந் தக்கைதை பூத்துக்க மழ்ந்துசே ரும்பொழிற்
செந்துவண் டின்னிசை பாடல்மல் குந்திகழ் சிக்கலுள்
வெந்தவெண் ணீற்றண்ணல் வெண்ணெய்ப் பிரான்விரை யார்கழல்
சிந்தைசெய் வார்வினை யாயின தேய்வது திண்ணமே. (4)

மங்குல்தங் கும்மறை யோர்கள்மா டத்தய லேமிகு
தெங்குதுங் கப்பொழிற் செல்வமல் குந்திகழ் சிக்கலுள்
வெங்கண்வெள் ளேறுடை வெண்ணெய்ப்பி ரானடி மேவவே
தங்கு மேற்சர தந்திரு நாளுந்த கையுமே. (5)

வண்டிரைத் தும்மது விம்மிய மாமலர்ப் பொய்கைசூழ்
தெண்டிரைக் கொள்புனல் வந்தொழு கும்வயற் சிக்கலுள்
விண்டிரைத் தம்மல ராற்றிகழ் வெண்ணெய்ப் பிரானடி
கண்டிரைத் தும்மன மேமகி யாய்கதி யாகவே. (6)

முன்னுமா டம்மதில் மூன்றிட னேயெரி யாய்விழத்
துன்னுவார் வெங்கணை யொன்றுசெ லுத்திய சோதியான்
செந்நெலா ரும்வயற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உன்னிநீ டம்மன மேநினை யாய்வினை ஓயவே. (7)

தெற்ற லாகிய தென்னிலங் கைக்கிறை வன்மலை
பற்றி னன்முடி பத்தொடு தோள்கள் நெரியவே
செற்ற தேவன்நஞ் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடி
உற்று நீ நினை யாய்வினை யாயின ஓயவே. (8)

மாலி னோடரு மாமறை வல்லமு னிவனும்
கோலி னார்குறு கச்சிவன் சேவடி கோலியும்
சீலந் தாமறி யார்திகழ் சிக்கல்வெண் ணெய்ப்பிரான்
பாலும் பன்மலர் தூவப்ப றையும்நம் பாவமே. (9)

பட்டை நல்துவ ராடையி னாரொடும் பாங்கிலாக்
கட்டமண்கழுக் கள்சொல்லி னைக்கரு தாதுநீர்
சிட்டன் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மான்செழு மாமறைப்
பட்டன் சேவடி யேபணி மின்பிணி போகவே. (10)

கந்த மார்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்நல்
செந்தண் பூம்பொழிற் சிக்கல்வெண் ணெய்ப்பெரு மானடிச்
சந்த மாச்சொன்ன செந்தமிழ் வல்லவர் வானிடை
வெந்த நீறணி யும்பெரு மானடி மேவரே. (11)

## அருணகிரிநாதர் திருப்புகழ்

புலவரை ரக்ஷிக் குந்தாரு வேமது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய திக்கெட் டும்போயு லாவிய புகழாளா

பொருவரு நட்பும் பண்பான வாய்மையி
லுலகிலு னக்கொப் புண்டோவெ னாநல
பொருள்கள்நி ரைத்துச் செம்பாக மாகிய கவிபாடி

விலையில்த மிழ்ச்சொற் குன்போலு தாரிக
ளெவரென மெத்தக் கொண்டாடி வாழ்வெனும்
வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர

மிகவறு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றுத வாழ்வையும் அருள்வாயே

இலகிய வெட்சிச் செந்தாம மார்புய
சிலைநுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே

இளையகொ டிச்சிக் கும்பாக சாதன
னுதவுமோ ருத்திக் குஞ்சீல நாயக
எழிலியெ ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே

அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி இசையாலே

அழகிய சிக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே.

## (2)

கன்னலொத்த மொழிச்சொல் வேசியர்
வன்மனத்தை யுருக்கு லீலையர்
கண்வெருட்டி விழித்த பார்வையர் இதமாகக்

கையிலுற்ற பொருட்கள் யாவையும்
வையெனக்கை விரிக்கும் வீணியர்
கைகள்பற்றி யிழுத்து மார்முலை தனில்வீழப்

பின்னிவிட்ட சடைக்கு ளேமலர்
தன்னைவைத்து முடிப்பை நீயவி
ழென்னுமற்ப குணத்த ராசையில் உழலாமல்

பெய்யுமுத்த மிழிற்ற யரபர
என்ன முத்தர் துதிக்க வேமகிழ்
பிஞ்ஞகர்க்கு ரைசெப்பு நாயக அருள்தாராய்

வன்னியொத்த படைக்க லாதிய
துன்னுகைக்கொ ளரக்கர் மாமுடி
மண்ணிலற்று விழச்செய் மாதவன் மருகோனே

மன்னுபைப்ப ணியுற்ற நீள்விட
மென்னவிட்டு முடிக்கு சூரனை
மல்லுடற்று முருட்டு மார்பற அடைவாகச்

சென்னிபற்றி யறுத்த கூரிய
மின்னிழைத்த திறத்த வேலவ
செய்யபொற்பு னவெற்பு மானனை மணிமார்பா

செம்மனத்தர் மிகுத்த மாதவர்
நன்மைபெற்ற உளத்தி லேமலர்
செல்வசிக்கல் நகர்க்குள் மேவிய பெருமாளே.

## ஸ்ரீ திருச்சிக்கல் க்ஷேத்திர மான்மிய வசனத்தில்

### விருத்தம்

திருமலியுங்கையிலே யிடத்தரன் பாற்காம
தேனிறைஞ்சிப் பூமியினில் வாசஞ்செய்து
வரவருள வேண்டுமென துவாதசத்தால்
வருஞ்சாமகால மெனவறிதியென்ன
ஒருவிடை கொடதுவரவக்கால மேவ
உறுபசியா லுயிர்துறந்த ஞமலிதன்னை
பருகிவரப் பரமனது சாபமேற்றுப்
பாரதனிற் புலிமுகமாய்ப் பரந்ததன்றே. (1)

### இதுவுமது

யெம்பெருமானிடம் பிறிது சாபத்தாலே
இருநாகை நகருக்குங்கீழ் வேளூர்க்குஞ்
செம்பாதியுறுஞ் சிக்கல் சேத்திரத்தில்
திருக்கேயா தீர்த்தமதிலாடி நாளும்
வம்புமலர் மல்லிகையி னடிவாரத்தில்
வதிந்து விமோசனமடைந்தும் வசிட்டர்வேண்ட
சம்புவு மஃதிருக்குமிடஞ்சொல்ல வந்து
சார்ந்தனரப்போது கண்டார் தவத்தின் மிக்கார். (2)

## வசிட்ட மகா முனிவர்கள் பூசனைப் படலச் சுருக்கம்

அந்த மகாமுனி வருமவ்வாவின்பாலா
லமைந்ததொரு தீர்த்தமதிலாடி வெண்ணெய்
கந்தமுறத்தாபனஞ் செய்ததைப் பூசிக்கக்
கண்ணுதலுங் காக்ஷியுருவாகத் தோன்றி
சிந்தையுறு மடியவருக் கெளியராகித்
தெவிட்டாத தெள்ளமுத மாகியார்க்கும்
பந்தமுறும் பிணிக்குமொரு மருந்துமாகிப்
பரகதிக்கு வித்தாகி யிருந்ததன்றே. (3)

## மூர்த்தி விசேடம்

வெண்ணெய்லிங்கப் பெருமானைத் தெரிசித்தோர்க்கு
மேதினியிற் காசிதனிலிறந்த பேர்க்கும்
எண்ணிலொரு தகை மூத்தியாகுமென்று
இயம்புதலால் வேதங்களிந்த மூர்த்தி
கண்ணெதிரி லடைந்தொருவ ரன்னதானங்
கனிவுபெறச் செய்தவர்கள் கருமப்பேற்றால்
நண்ணி நிதியிவ்வுலக முழுதுமாண்டு
நாயகமாஞ் சிவலோகம் நணுகிவாழ்வார். (4)

## முசுகுந்த சக்கரவர்த்தி பழிநீங்கிய படலம்

இதுவன்றி யயோத்தி நகரந்தன்னில்
இருந்தரசுபுரிந்த முசுகுந்த னென்போன்
கதுவென்று வசுவமதிலேறி வேட்டை
கானகத்தி லாடிவருங் காலமாவால்
மிதியுண்டு வீய்ந்தவேதியன் பாபத்தால்
மேவிவரும் பழியெங்குந் தீராதாகி
மதுவொன்று பொழிலாரிந் நகரின்மேவ
வன்பழியு நீங்கியிவண் வதிந்திட்டானல். (5)

### இதுவுமது

வதிந்தவனும் வானுயர் பொற்றிருக்கோயிற்கண்
வண்டிரையுங் கொன்றைமலர்ச் சிகழிவேய்ந்து
பொதிந்தசடைத் தேனுவிடங் கரைத்தாபித்துப்
பொலிவுமிகுஞ் சித்திரைத்தேர் புதிதாச்செய்தான்

பதிந்த பரஞானமுறும் பிள்ளையாரும்
பதிகமது பண்கொண்டு பாடப்பெற்றுங்
குதிந்து தளையமரர்களையிட்ட சூரன்
குடிபறியச் சத்தியிடங்குகன் வேல்கொண்டான் (6)

## சூரசங்காரப் படலம்

துங்கமிகுஞ் சத்தி வடிவேல் கைக்கொண்டு
சூரன் முதற்சேனைகளை வேரோடெய்த
வெங்கள்பிரான் சிங்கார வேலனெந்தை
இயற்கைதனை யெம்மாலே யியம்பலாமோ
சங்கரன் மாலயன் முதலாந் தேவரோடுஞ்
சராசரங்க ளுயிரெவைக்கு மாதியாகி
கங்குல் பகலற்ற விடந்தானேயாகிக்
கருதரிய குருமூர்த்தி வடிவாமன்றே. (7)

### இதுவுமது

அரிபிரமன் முதலான தேவரெல்லாம்
அஞ்சிடவே யாயிரத் தெட்டண்ட மாண்டு
விரிதிசைகள் புகழ்பரப்பி விளங்குஞ் சூரன்
மேலான தவவலியானவனை வீய்த்த
பெரிய வடிவேலினுக்கு வீரகத்தி
பெயரவறு முகத்தவரின் நகர்க்குத் தென்கீழ்த்
தெரிதிசையில் விரிகிரையார் கடம்ப தீர்த்தந்
தோர்ந்தாடிச் சிவபூசை செய்வாரானார். (8)

### இதுவுமது

கங்கைமதி சடைக்கணிந்த பெருமாீன்றன்னைக்
கருத்துறவே மத்தியான காலந்தன்னி
லங்கை மலர்கொடு பூசித்தந்திப்போதி
லரிய திருச்சிக்கல் நகர்பால்தீ தீர்த்தத்தில்
துங்கமுறக் குடைந்து சத்தியாயதாக்ஷி
துணைமலர்த்தாள் கருத்துறவே தவமேற்கொண்டு
பங்கமிலாச் சிங்கார வேலினுற்ற
பழிநீங்கி யுமையருளாற் கரத்திலுற்றார். (9)

## பார்வதீசுரப் படலம்.

வேறு

கண்ணுதற் பெருமானுமையொடு விடைமேற்
காணுறப் பூவளங்கருதி
விண்ணுறு மார்க்கமாகவே வந்து
விரிகடலுலகி லெவ்வளனும்
நண்ணுரத் தெரிந்து சிக்கல் மாநகரில்
நணுகுமுன் யாவையுமீன்ற
ஒண்ணுதலுமையார் வெண்ணெய்லிங்கேசற்
குரிய கோயிற்குத் தென்கீழ்பால். (10)

இதுவுமது

சுத்தவத்து விதச் சுயம்பிரகாசச்
சுடர்ச்சிவலிங்கம் நேர் நிறீஇ
வித்தகத் தீர்த்தமுற்றிட மூழ்கி
விதிப்படி பூசை செய்தமையால்
உற்ற பார்ப்பதி யீசுரமெனப்பெயரா
யோங்குமப்பதி நதியாடி
அத்தனைத் தொழுதுவைந்து பேரடைந்த
அரும்பிணி யொழிந்து வீடடைந்த. (11)

## கோசிகப் படலம்.

நற்றவம் புரிய கோசிகனதனை
நாட்ட மாயிரத்தவன் மொழியால்
சித்தம தொருக்கி நயற்றவமழிக்கச்
செய்தனன் திலோத்தமை தன்னை
கற்றிடு முனியுமிந் நகரடைந்து
கனிந்தபால் தீர்த்தத்தின் மூழ்கி
உற்றிடு நவநீதப் பெருமானை
உளங்கொளப் பழி தொலைந்ததுவே (12)

இதுவுமது

அருளுருவான வெண்ணெய்லிங் கேசர்க்
கடுத்த உத்திரத்திலோர் தீர்த்தந்
தெருளுறச் செய்தாங்கிருந்து நற்றவத்திற்
சிந்தை யுற்றிருந்தனர் தென்பால்

மருளறப் பெருகுவிருத்த காவேரி
வழங்குதலானு மித்தலத்தில்
இருளறக் கதியைக் கொடுப்பதென் றுரைப்பர்
இருமையு முணர்ந்திடும் பெரியோர் (13)

### வாதாவி வில்வலன் வதைப் படலம்.

தெருட்படு நற்கையிலையினி லுமையை ஈசன்
திருக்கலியாணஞ் செய்யுநாளிற் றென்பால்
உருக்கொடு மேனிவர வகத்தீசர்மேவ
லுறுங்காலில் வில்வலன் வாதாவி யென்னும்
மருட்படு துன்மனத்தவரை விளித்தல்செய்த
வன்பழியை நீக்கயிவண் வதிந்தோர் தீர்த்தம்
அருள்படுதன் பெயராக்கி யரனையுள்கி
அடுத்த பழிதொலைத் துமவரங்குற்றுரால் (14)

### மூர்த்தி தலம் தீர்த்த விசேடம்.

### மூர்த்தி பலம் கீர்த்தி விசேடம்.

பேராருமூர்த்தி தலந்தீர்த்த மூன்றும்
பிறங்குதலாலிந் நகர்போல் புவனத்துள்ளு
மாரர்னு மெடுத்தியம்ப நகரொன்றில்லை
யாதலிலிந் நகர்வசித்து மாடித்தீர்த்த
மேராரும் பெருமானைப் பாடியேத்தி
யிருகரமுஞ் சிரசின் மேலெடுத்துக்கூப்பி
நீராருங் கண்ணருவி பொழிய நெஞ்சம்
நெக்குருகுமவர்க்கு முத்தி நேருமன்றே. (15)

### தீர்த்த விசேடம்.

அரியதொரு விந்நகரில் வந்தாரேனு
மறியாமலிந் நதியி லாடினாலும்
பரிமகத்திலுறும் பயனுமடைந்து மேலும்
பவவினையை நீக்கியுறும் பதமேற்கொள்வர்
உரியமனத் தொடர்வறவே மூழ்குவோர்க
ளுறும் பலனைச்சொலப்போமோ. வுயர்ந்தோராலும்
கரியநெடுமா லயனு முதலாந்தேவர்
கருதியிதிலாடிவரும் வினைகள் தீர்ப்பார். (16)

## கந்தசஷ்டி மகோற்சவப் படலம்.

வேறு

மறைவழியிற் கந்தசஷ்டி மகோற்சவத்தின்
மகிமைதனை மனத்திற் கொண்டு
இறையளவு மெடுத்துரைப்ப வேறுநகர்
திருச் சிக்கலினுக் கீடாமோ
கறையமையாத் துலைமதி நாலாம் விழாவிற்
கதியளிக்கும் ரிஷப மீதல்
நிறைவமைய சிங்கார வேலவர்
நன்னெறி யளிக்க நேர்வாரன்றே. (17)

வேறு

பொன்னுரு வாமிர்தமிசை வைந்தாநாளிற்
புகழ்விளங்கு முச்சபமு நீலவண்ணத்
தன்மயமாஞ் சத்தியாய் தாக்ஷியம்மை
தரக்கரத்திற் சிங்கார வேலைத்தாங்கு
முன்னதமு மாருநாள்த் தேனும்பாலு
முயர்ந்த பன்னீர் காவடிகளபிஷேகித்தும்
வின்னமுறுஞ் சூரனைச் சம்மாரஞ் செய்தும்
வித்தகமா மிந்திரன்றன் விமானமுற்றூர். (18)

வேறு

அத்தினமிரவி லடற்கதிர் வேலோ
னணிமயிலவர் கணத் தெழுந்து
உற்றிடு காக்ஷிகொடுத்தது மறுநாள்
உடுக்கிடை துணைக்கயல் விழியு
முற்றிடாக்குயமு மூருந்து புன்னகையு
முண்டக வதனமு மொழியக்
கற்றிடாதழ குத்திருந்த தெய்வானை
யம்மையைக் கடிமண மூடித்தும். (19)

இரவதனில் ரதமிரு ணான்காநாளில்
யெள்ளுவிழ விடமின்றியுல்கர் கூடி
பரவிமிகத் துதிக்க வள்ளியம்மை தன்னைப்
பரிந்திடவே மணமுடித்து மக்காலத்தில்

வரிமிளிரக் குடைந்தாடி மதுப்பிலிற்றும்
மலர்மாலே யலங்கரிக்கு மறத்தின்மீது
தெரியவருங்காட்சி யிதுவன்றி யின்னந்
திருவிழாச் சிறப்பு மிகவாகுந்தேறே. (20)

வேறு

விளங்குமெய் யறிவானந்த வெண்ணெய்லிங்கேசர் வாழி
களங்கமில் வேனெடுங்கணம்மையுங் கணேசர் வாழி
துளங்கிடு மலர்மென் கூந்தற்ரேகைய ரிருவரோடும்
உளம்புகு குகனுவாழி யுயர்ந்தவேல் வாழி வாழி. (21)

வேறு

அரியயன் முதற்றேவர்க ளனைவரும் வாழி
உரியநற்கலே வேதமு வாழியுள் தவத்தாற்
பெரியர் மாமறையவர்களும் வாழி பெட்புறுநாலத்
தெரியு நாவலர்வாழி நேர்த்திருவிழா வாழி. (22)

## கீதத் தமிழில்.

ஆசிரியர் திருவாசகம்

**திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.**

இராகம்: **ஆனந்தபைரவி** தாளம்: **ஆதி**

பல்லவி

சிங்கார வேலவனும் செவ்வேளேச் சிக்கலெனும்
மங்காத மாதலத்தில் வாழ்த்தி நின்றேன் — மனமகிழ்ந்து
(சி)

அனுபல்லவி

என் காதலுக்குரிய இன்பக் கடலாம் கந்தன்
'இங்கோடி வாரா'யென்றே என்னேயழைத்தான் இன்றே
(சி)

சரணம்

பங்காரும் மாதுமையின் பாகன் நவநீதனுர்
பாங்கார்ந்திடப் புகழ்ந்து பார்த்திருக்க மகிழ்ந்து
சங்கார்வெண் ணீற்றுடனே சகலலோகம் புரந்து
சாஸ்வதமாய் ஞானவேல் வீசும் கரத்தின் வேளாம் (சி)

இராகம்: **கல்யாணி**] பல்லவி [தாளம்: **சாபு**

திருச்சிக்கலில் உறையும் தேவதேவா உன்றன்
தெரிசனம் பெறநாடித் தேடிவந்தேன் – அருள் உவந்தே (திரு)

அனுபல்லவி

அருச்சித்துன் திருப்பாதம் அணைத்துப் பிடித்தெனது
அகச் சுத்தமும் அடைந்தே இகச்சித்தெலாம் பெறுவான் (திரு)

சரணம்

கருச்சிக்கி யாணிழிந்து காலமெலாம் உழன்று
கவலைக் கிருப்பிடமாய்க் காசினியி லிருந்தேன்
தெருச் சுற்றியின்றுனது திருவுருவம் கண்டதால்
சிவச்சித்தி தானடைந்தேன் பவச்சுத்தி தான்மிகுந்தேன் (திரு)

## சிக்கல் புகழ் பாமாலையில்
### சிக்கல் பாடல்கள்.

**திரு. N. S. சிதம்பரம்.**
(திருச்சி அகில இந்திய ரேடியோ.)

### சுந்தர கணபதி.

இராகம்: ஹம்ஸத்வனி] பல்லவி [தாளம்: **ஆதி**

சுந்தர கணபதியே அருள்நிதியே.
சுகமலர்ப் பதமே பணிந்து மகிழ்ந்தேன் (சு)

அனுபல்லவி

சந்ததம் அருள்செய் சகலநல் வரனே
சத்திய தமிழினில் சாருமெய்ப் பரனே (சி)

சரணம்

நின்பதம் நிதமும் நித்திய தமிழினில்
நினைவொடு பரவிடும் நிலையருள் செய்வாய்
அற்புத சிங்கார கோபுரப் பொலிவுறும்
அழகிய சிக்கலில் அமைந்து விளங்கிடும் (சி)

## வெண்ணெய் நாதர்.

இராகம்: பைரவி] பல்லவி [தாளம்: ஆதி

ஞான மாக நினைவாய் — மனமே
ஞான போதனை வெண்ணெய் நாதனை (ஞா)

அனுபல்லவி

கானயின்பமுடன் கனிந்து பாடிய
ஞானசம்பந்தரின் நல்லுரை நாடியே (ஞா)

சரணம்

வசிட்ட முனிவரும் காம தேனுவும்
வந்தனை செய்தே உய்ந்தனர் இதமே
கசிந்திடும் அன்பால் கரைந்துரு கிடுவாய்
கடுவினை நைந்திடும் கருணை சார்ந்திடும் (ஞா)

## சிக்கல் சிங்காரவேலவர்.

இராகம்: வச்சிரகாந்தி] பல்லவி [தாளம்: ஆதி

சிக்கல் சிங்கார வேலா — உன்
செந்திரு மேவும் திருவடி தருவாய் (சி)

அனுபல்லவி

திக்கெல்லாம் உன் திருப்புகழ் பாடும்
தெளிந்த அன்பினில் தினமும் கூடும் (சி)

சரணம்

கருணை விழிகளும் கனிந்த நோக்கும்
கையில்தனி வேலும் கோல மயிலும்
அருமை வள்ளியும்நல் தெய்வ யானையும்
அமைந்திடக் கண்டேன் அழகினை உண்டேன் (சி)

குறிப்பு :— இப்பாடலை பேகடா இராகம், சாப்பு தாளத்திலும் பாடலாம்.

இராகம்: **கோமேதகப்ரியா**] பல்லவி [தாளம்: **ஆதி**

சிக்கல் சீர் பேரழகா
சிங்கார வேல் குமரா (சி)

அநுபல்லவி

பக்க உதவியில்லா—நல்ல
பக்தர்க் கருள்செய் சீலா (சி)

சரணம்

திருப்புகழ் புனைந்த புலவர்
அருணகிரிப் பேராளர்
விருப்புடன் வந்தனை செய்தார்
வியந்தார் மகிழ்வில் திகழ்ந்தார்
"அழகிய சிக்கற் சிங்கார
வேலவ" என்றனை அழைத்தார்
அழைத்த அம்மொழி இன்றும்
அன்றும் என்றும் மெய்யே (சி)

குறிப்பு :— இப்பாடலை காமவர்த்தனி இராகம், ரூபக தாளத்திலும் பாடலாம்.

## வேல்நெடுங் கண்ணி

இராகம்: **நாகவல்லி**] பல்லவி [தாளம்: **ஆதி**

வேல் நெடுங் கண்ணி யன்னையே—சக்தி
வேண்டினேன் தினம் விருப்புடன் உன்னையே (வே)

அநுபல்லவி

பால்குளம் மருவிடும் பாங்குயர் சிக்கலில்
பண்பான அன்பர் பணிந்திடும் சீலநல் (வே)

சரணம்

வெற்றி வேல்தனை வேலனுக் கீந்தாய்
வேலனும் சூரனை வென்றிடச் செய்தாய்
பற்றிடத் துணிந்தேன் பதமல ரிணையே
பாதகம் ஒழித்தே சாதகம் அருள்வாய் (வே)

குறிப்பு :- இப்பாடலை கல்யாணி இராகம், ஆதி தாளத்திலும் பாடலாம்.

## கோலக் கிளி

இரகாம்: **காபி**] பல்லவி [தாளம்: **ஆதி**

கோலக் கிளி எனைக் கொஞ்சிடும் போழ்தினில்
குழைவேன் மனமே மகிழ்வொடு தினமே (கோ)

அநுபல்லவி

சீல முயர்ந்திடும் சிக்கற் பதிவாழ்
சிங்கார வேலவன் சீர்த்திருக் கோயிலில் (கோ)

சரணம்

'அக்கக்கா' எனும் அற்புத மொழியிதம்
ஆயிரம் தடவைகள் கேட்பினும் அமிர்தம்
எக்காலத்திலும் இனித்திடும் சுவைதரும்
எழில்மிகும் அதன்மொழி என்னென்பேன் அருள் (கோ)

'யாரடா' என்னும்; 'யாரடீ' என்பேன்;
யாரையும் அழைத்து இதங்கள் பேசிடும்;
நேரமும் கழிவதை நினைக்கவும் மாட்டேன்
நிறையதன் அழகினில் நிலைத்து நின்றிடுவேன் (கோ)

## சூர சம்ஹாரச் சிறப்பு

இராகம்: ஜயந்தஸேனு] பல்லவி [தாளம்: ஆதி

பார்க்க வேண்டும் மனமே
சிக்கலில் (பா)

அநுபல்லவி

சீர்த்தி நிறைந்திடும் சிங்கார வேலவன்
சினமிகும் சூரனை சிதைத்திடும் காட்சி (பா)

சரணம்

தாயவள் சக்தி தந்திடும் வேலால்
தீயவன் சூரனை வென்றிடும் காட்சியும்
தூயநல் முருகன் துலங்கிடும் கோலமும்
துணைவியர் இருவரை மணந்திடும் காட்சியும் (பா)

## பேசுங்கிளி வனப்பு

**தி. து. மீனுட்சிசுந்தரம் B. A., B. L.**

எழில் ததும்பும் இந்த ஆலயத்தில் ஒரு அற்புத வெள்ளைக் கிளி யாவரையும் நா இனிக்கும் தமிழால் 'அக்கா அக்கா' என்று அழைக்கும். 'யார்ரா அது' என்று வினவும். இன்னும் சந்தோஷம் அதிகமானுல் சிகில் அடிக்கும். கீழே இறங்கி பாங்குடன் ஆடும். சுமார் 50 வருட காலமாக இப்படி அற்புதமாக யாவரையும் கவர்ந்த கிளி சிங்கார வேலவர் பாதத்தை 1—6—49ல் அடைந்தது.

சிக்கல் தலக் கிளியே—வண்ணமே
சிங்கார சொற் கிளியே!
வெள்ளை ஒயிற் கிளியே—சிங்கார
வேலவனின் கிளியே! 1

அஞ்சுகமே அழகே—அமுதே
அன்பில் விளை சுகமே!
நெஞ்சினில் அன்புமிக—அக்காவென்று
நாவிட் டழைக்கின்ருய்! 2

கொஞ்சிக் குழையும் வார்த்தை—வண்ணமே
குதலை மொழி போன்று
உச்சி குளிர்விக்கும்—எந்தனின்
உள்ளம் நிறைவிக்கும்! 3

கண்களைப் பறி கொடுத்தோர்—கோயிலில்
கண்மணி உன்னைக் கண்டு
கொஞ்சும் மொழி கேட்க—வண்ணமே
கவலையெலாம் மறப்பார்! 4

'யார்ரா அது' என்பாய்—யாவரும்
என்னடா விந்தை யென்ன
கூண்டினுள் உன்னைக் கண்டு—பெரிதொரு
களிப்பினைக் காண்பர்! 5

எத்திசையி னின்றும்—வருபவர்
எவ்வூரென அறிய
எத்தினமும் நீயே—சலிப்பின்றி
'யார்ரா அது' என்பாய்! 6

தங்க மிகு அணிகள்—சுந்தரம்
தங்கும் அரும் பொருள்கள்
உன் கவனத்தில் கொண்டு—உஷாராய்
உற்று மொழிந்தனையோ! 7

எங்கும் தவழ் அழகை—கண்டவர்
எல்லோரும் இன்பம் துய்க்க
எங்குனைக் காணுது—போவரோ
என்றுதான் கூவுவையோ! 8

தங்கச் சுடர் மேனி—மயில்போல்
தாங்கவில்லை யேனும்
இங்கித வெண்பட்டு—காட்டவோ
யாரையும் அழைக்கின்றாய்! 9

தங்க உருவம் கண்டால்—அவைகள்
தருமோ வசன மொழி!
'பொங்கி நான் கொட்டிடுவேன்'—என்றேதான்
பூரித்தளிக்கும் மொழி! 10

ஐம்பது ஆண்டுகளாய்—இப்படி
யாரையும் கேட்கு மொழி!
வம்பு நீ செய்வதற்கோ—இலையேல்
வாது நீ புரிவதற்கோ! 11

**கோயில் வனப்பு**

"யாரவன்" என்று கேட்டாய்—"கேட்டுக்கொள்"
எந்தன் பதில் அளிப்பை!
ஊர் ஊராய்ச் சுற்றி வந்தேன்—அழகில்
உள்ளம் உவப்படைந்தேன்! 12

தென்னாடு சுற்றி வந்தேன்—இனிய
தமிழுலகைக் கண்டேன்!
இன்பம் விளைவிக்கும்—இப்பதி
எங்குமே காணவில்லை! 13

இங்கு நான் கண்டதையே—வண்ணமே
எடுத்துரைக் கின்றேன், கேள்!
எங்கும் இனிமையன்றோ—ஆகா, இங்கு
என்ன எழில் ஓட்டம்! 14

என்ன அழகடியே—அம்மம்ம!
என்னென்று சொல்லுவேன் யான்!
கண்களுக்கோர் விருந்து—அற்புதக்
காட்சிகளின் கனிவு! 15

ஆண்டவன் சந்நிதியை அடைந்து
ஆனந்த மெய்தியதை
மீண்டும் நான் சொல்வதென்றால்—எனக்கு
முற்றுமே வார்த்தை இல்லை! 16

அழகிய சிக்கல்—சிங்கார
வேலவனைக் கண்டேன்!
குழைந்தது உள்ளம்—உருகிக்
காதல் உகுத்திடவே! 17

நெஞ்சம் நிறைந்திடவே—எந்தனின்
நாவும் நிறைந்திடவே
தஞ்சம் எனச்சொல்லி—அவரின்
தாளை இறைஞ்சி நின்றேன்! 18

வர்ண வகை சலவை—கற்கள்
வேய்ந்த ஒளி சபையில்
வண்ண வெள்ளி மஞ்சம்—தெய்வயானை
வள்ளியுடன் கோலம் 19

கண்கள் விருந்தோம்பி—கந்தனின்
காந்தத்திலே லயிக்க
விண்ணின் சுகமெல்லாம்—மண்ணிலே
வந்தேதான் வாய்த்ததடி! 20

## பாடல் வனப்பு

சகல சிற்பி தந்த—செல்வங்கள்
சந்தோஷமாய்க் கண்டேன்!
உலக சிற்பி பிரம்மன்—படைத்த
ஓவியம் உன்னைக் கண்டேன்! 21

அழகில் சிறந்ததனால்—சிங்கார
ஐயனின் பதிசேர்ந்தாய்!
மொழியுள் சிறந்ததனால்—செந்தமிழ்
மொழியவுமே சிறந்தாய்! 22

அருணகிரிநாதர்—அன்புடன்
அருளிய ஆரமுது
திருப்புகழ் கண்டவுடன்—தமிழைத்
தேன் மொழியாய் ஏற்றாய்! 23

'அழகிய சிக்கல்—சிங்கார
வேலவ' என்றவரும்
மொழி புகழ்ந்திடவே—இப்பதி
மோகமுற்றே வாழ்வாய்! 24

கண்கள் கண்ட அழகை—கருத்தும்
கொண்ட பேரின்பமதை
பண்ணுடன் பாமலராய்—சம்பந்தர்
பாங்குடனே அமைத்தார்! 25

வானும் தேனும் மதியும்—உலாவும்
வண்ணச் சிக்கல் என்றார்!
காணும் எண்ணங் கொண்டே—வந்துநீ
காமமுற்றே நிலைத்தாய்! 26

பொன் மொழிப்பாக்களிலே—உளக்கண்
பேரின்பம் கண்டவுடன்
உன் மொழி செந்தமிழாய்—அமைத்து
உள்ளம் உவந்து நிற்பாய்! 27

பச்சைப் பெருங் கூண்டின்—மத்தியில்
பாங்குடன் வீற்றிருப்பாய்!
இச்சையுடன் நெருங்க—வண்ணமே
இன்பமுடன் இறங்கி 28

கண்ணங் கரிய விழி—காதலைக்
காட்டியே எம்மை நோக்க
உன்னருங் கால்கள் மாற்றி—வண்ணமே
உவப்பொடு மாடிடுவாய்! 29

தில்லை நடமாடும்—நடேசன்
திருநடனம் கண்டோ
சொல்லை செவிகுளிர—உரைத்து
சொகுசு நடம் புரிவாய்! 30

## தலப்புராண வனப்பு.

வாடிப் பசிமிகவே—பசுவும்
வேதனை தாங்கொணாது
தேடிப்புலா லுணவை—பசிக்குத்
தாராளமாய் புசிக்க 31

கோடிக் கொடுக்கவல்ல—தயாபரன்
கோபம் பெரிதுமாகி
"ஓடி வடிவம்வேறாய்—புலியாய்
வாழ்வாய்" எனச்சபிக்க 32

உ

# திருவானைக்கா கோயில் வரலாறு

ஷை தேவஸ்தானம் கௌரவ தர்மகர்த்தர்கள்

**திரு. சா.ராம.சித. பழனியப்பச் செட்டியார் அவர்கள்**

(மானேஜிங் டிரஸ்டி)

**திரு. C. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்**

**திரு. C. நமசிவாயம் பிள்ளை அவர்கள்**

நிர்வாக அதிகாரி

**திரு. வெ. ரங்கராஜா அவர்கள்**

ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

★

திருச்சி உறையூர் M. M. பெண்கள் உயர்நிலைப்பள்ளி

தமிழ் ஆசிரியரும்,

H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை

இயற்றியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்றது.

மூன்றும் பதிப்பு.


திருச்சினுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,

திருச்சிராப்பள்ளி.

1952

உரிமை செய்யப்பெற்றது.]

[விலை 8 அணா



சா. ராம. சித. சிதம்பரம் ஐயா அவர்கள்
ஆதி திருப்பணியாளர்